Registered No. M-4483 Madras War Review (TAMIL) 14-4-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம் ஏப்ரல் 14உ, வெள்ளிக்கிழமை இதழ் 32

சர் க்ளாட் ஆக்கின்லெக்.

தெற்கே செய்யப்படுவதை விட மேலாக வேறெங்கும் செய்யப்படுவதில்லை

நம்மவர்களை படையினராக்கப் பயிற்சி யளிப்பதும், இராணுவத் தேவைகளுக்குத் தக்கபடி நமது மூலப் பொருட்களை உருப்படுத்துவதும், இந்திய படைத் தலைமையின் கடமைகளாம்.

இந்த வேலை செம்மையாக நடைபெறுகிறது என்பது பற்றி திருப்தி யடைகிறேன். படைகளைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களும் சிப்பாய்களும், யுத்தக் கைத்தொழில்களில் ஈடுபட்டிருக்கும் 'சிவிலியன்'களும், படைகளில் சேர்ந்துள்ள பெண்களும், தாமாகவே தொண்டாற்ற முன் வந்தவர்களும்—இந்தப் பெண்களில் இன்னும் அதிகம் பேர் தேவை—தம் கடமையை நிறை வேற்றுகிருர்கள். இப்போது செய்யப்படுவதை விட மேலும் அதிகமாகச் செய்ய முடியாது என்று இதனல் அர்த்தமாகாது. இன்னும் அதிகமாக நாம் செய்யலாம்; அப்படிச் செய்யவும் வேண்டும்.

தென்னிந்தியாவிலுள்ள மாகாணங்களுக்கும் சுதேச சமஸ்தானங்களுக்கும் சமீபத்தில் நான் போயிருந்தேன். தெற்கே செய்யப்படுவதை விட, மேலாக வேறெங்கும் செய்யப்படுவதில்லை என்ற முடிவிற்கு நான் வந்து விட்டேன். இதில் சம்பந்தப் பட்டுள்ள அனைவரையும் பாராட்ட நான் விரும்புகிறேன். நாம் தளர்ச்சி யடைந்தோம் என்று கனவு கூடக் காணமுடியாது. யுத்தம் எப்போது முடியும் என்று சொல்வதற்கு முடியாது என்பது தான் என்னுடைய எண்ணம்.

மேன்மை தங்கிய சர் க்ளாட் ஆக்கின்லெக், இந்தியப் படைத் தலைவர், நியூ டில்லியிலிருந்து சென்ற திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கை.

பொருளடக்கம்.

	பக்கம்,		பக்கம்,
முகப்புப் படம் : சர்க்ளாட் ஆக்கின்லெக் ..	1	போர்முனை நிகழ்ச்சி விளக்கம்	4
தெற்கே செய்யப்படுவதை விட மேலாக வேறெங்கும் செய்யப்படுவதில்லை	1	ஜப்பானிய உள்நாட்டுப் பிரசார ஆராய்ச்சி ..	5
முரசொலி	2	இந்திய கப்பற் படை உத்தியோகங்கள் ..	7
தலையங்கம்—“ஒடெஸ்ஸா மீட்சி”	3	கெடுவான் கேடு நினைப்பான்	9
		வீரரின் தந்தைக்கு வாழ்த்து	11
		யுத்தநாட் குறிப்புகள்	12

முரசொலி

“இப்போதுள்ளது போல நெருக்கடியான நிலைமையில் ஜெர்மனி ஒரு போதும் இருந்த தில்லை.”

—ஜெனரல் ஐரா சி. ஈஸ்டர்,
மத்தியதரைக் கடற்பகுதி நேச நாட்டு விமானப் படைத் தலைவர் எப்ரல் மாதம் 6-ம் தேதி கூறியது.

* * * *

“வட அட்லாண்டிக் கடலில் போய் வந்துகொண்டிருக்கும் சப்ளை கப்பல்களை ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் தாக்கக் கூடும். ஜெர்மனியில் நீர் மூழ்கிக் கப்பல் உற்பத்தி நிற்கவே யில்லை.”

—கர்னல் நாக்ஸ்,
அமெரிக்க யுத்த மந்திரி எப்ரல் மாதம் 6-ம் தேதி கூறியது.

* * * *

“பொருளாதாரத் துறையில் ஜெர்மனியின் பலத்தை விட, அமெரிக்காவின் பலம் வெகு அதிகமாயிருக்கிறது. இத்துடன் நேச நாடுகளின் படை பலமும் சேர்ந்தால், வெற்றி நமக்கு நிச்சயமாகக் கிடைக்கும்.”

—மிஸ்டர் எல். க்ரோலி,
—அமெரிக்காவிலுள்ள அந்நிய நாட்டுப் பொருளாதார நிர்வாகி எப்ரல் மாதம் 6-ம் தேதி கூறியது.

* * * *

“பசிபிக் மகா சமுத்திரத்தில், மேலும் 14 ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. பாலம் ஒலியை என்னுமிடத்திலும் யாட் என்னுமிடத்திலு மிருந்த ஜப்பானியக் கப்பல்க ளெல்லாம் மூழ்கடிக்கப்பட்டன : அல்லது சேதமாக்கப்பட்டன. யுத்தம் ஆரம்பமானதிலிருந்து அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்களால் 667 ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கியிருக்க வேண்டும்.”

—கர்னல் நாக்ஸ்,
அமெரிக்க யுத்த மந்திரி எப்ரல் மாதம் 4-ம் தேதி கூறியது.

* * * *

நாஜிஸத்தோடும் பாசிஸத்தோடும் எவ்வித சமரசமும் கிடையாது. அவை எந்த இடத்திலும் தலைகாட்டக் கூடாது. சமரசப் பேச்சையோ, சமாதானத்தையோ, அவர்கள் எதிர்பார்க்க முடியாது. அவர்கள் மீள சந்தர்ப்பமே இடையாது. நமது அந்நிய நாட்டுக் கொள்கை சுருக்கமானது ; உறுதியானது. தலைவர் ரூஸ்வெல்ட் கூறியது போல அனைவருக்கும் தெரிந்தது. நானாவது, அவராவது, எவ்விதமான ரகசிய ஒப்பந்தமும் செய்ததில்லை ; இனிச் செய்யவும் மாட்டோம். அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் எந்த விதக் கட்டுப்பாட்டிற்கும் உட்படுத்திக் கொள்ள மாட்டோம். ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டிய பருவத்தை அணுகிக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட பெரும் பொறுப்பு இதுவரை ஒரு போதும் ஏற்பட்டதே கிடையாது. பூரணமான அறிவும் ஒற்றுமையும் சுறுசுறுப்பும் இருந்தால் மட்டுந் தான், நாம் சமாளிக்கக் கூடும்.

—மிஸ்டர் கார்டெல் ஹல்,
அமெரிக்க மந்திரி எப்ரல் மாதம் 9-ம் தேதி ஒலிபெருக்கிய பிரசங்கத்தில் கூறியது.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் ஏப்ரல் 14, வெள்ளிக்கிழமை | இதழ் 32

ஒடெஸ்ஸா மீட்சி

“முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.” இதற்குச் சான்றாக விளங்குகிறது ஜெர்மன் படைகளின் நிலைமை. 1941-ம் வருஷத்தில் ஜெர்மானியர்கள் உக்ரேய்ன் மாகாணத்திற் புகுந்து ரஷ்யர்களைப் படுத்திய பாடு கொஞ்சமல்ல. ஒடெஸ்ஸா நகரத்தைக் காக்கும் பொருட்டு 2 மாத காலம் மகா வீரத்தோடு போராடிய ரஷ்யர்கள், கடைசியாக 1941-ம் வருஷம் அக்டோபர் மாதம் 17-ம் தேதி பின் வாங்கிப் போகும்படியான நிர்ப்பந்த நிலைமை ஏற்பட்டது. அப்போது அவர்கள் மனம் எவ்வளவு பதைத்திருக்கும்! பழி வாங்கியே தீர வேண்டுமென்னும் உறுதி அவர்கள் உள்ளத்தே பதிந்திருக்க வேண்டு மல்லவா? ஆம். வீர ரஷ்யர்கள் பழிவாங்கித் தீர்த்து விட்டார்கள். தாம் முன்பு இழந்த ஒடெஸ்ஸா நகரை மீண்டும் கைப்பற்றி விட்டார்கள். தாம் ஒடெஸ்ஸா நகரை விட்டு ஓடும்போது எவ்வளவு அங்கலாய்ப்போடு ஓடினார்களோ, அதை விடப் பதின் மடங்கு அலங்கோலத்தோடு ஓடும்படி ஜெர்மானியர்களை விரட்டுகிறார்கள். முன்பு ஒடெஸ்ஸாவை ஜெர்மானியர்கள் முற்றுகை யிட்டபோது, அந்தப் படையில் ருமேனியப் படைகளில் செம்பாதிக் கதிகமாகவே ஈடு பட்டிருந்தது. அடுத்த ‘‘மரியாதை’’ ருமேனியாவுக்குத் தான். செக்கோஸ்லோவியாவுக்கும் இதில் கொஞ்சம் பங்கு உண்டு.

ஒடெஸ்ஸா, கருங்கடலிலுள்ள ஒரு முக்கியமான துறைமுகப் பட்டினம். பிற நாடுகளுடன் வணிகஞ் செய்வதற்கு மிகவும் ஏற்றது. உக்ரெய்ன் மாகாணத்தின் கண் போன்றது. ரஷ்யாவிலே உள்ள எல்லா மாகாணங்களையும் விட, உக்ரேய்ன் மாகாணந் தான் மிகச் செழிப்பானது. பல வகைச் சுரங்கங்கள் அங்கே உண்டு. பலவகைப் பயிர்களும் அபரிமிதமாக விளைகின்றன. எண்ணெய்க் கிணறுகள் ஏராளம். ஆகவே, மூலப் பொருட்களும், விளைப் பொருட்களும் நிறையக் கிடைக்குமிடத்தில், செயற்கைப் பொருட்களுக்கா பஞ்சம்? இவை நிறைந்துள்ள ஒரு பகுதியில், செல்வம் கொழிக்கும். இந்தப் பகுதியில் பொருளாதார நிலையும் வெகுவாக ஓங்கித் தானிருந்தது. உக்ரேய்ன் மாகாணமும் அதைச் சேர்ந்த ஒடெஸ்ஸா துறைமுகமும் போன பிறகு, ஜெர்மன் படைகளின் இடுப் பொடிந்தது போலத்தான். இப்போது ரஷ்யப் படைகள் ருமேனியாவிற்குள்ளும் நுழைந்து விட்டன. இப்படி நுழைந்ததற்கு இரண்டு காரணங்களுண்டு. முதலாவது காரணம் பழி வாங்க வேண்டும் என்னும் உணர்ச்சி. இரண்டாவது காரணம் எண்ணெய்க் கிணறுகள். உலகத்திலே உற்பத்தியாகும் பெட்ரோலில் 45 சத விகிதம் ருமேனியாவில் தான் உற்பத்தியாகின்றது. இது இப்போது ஜெர்மன் படைகளுக்குப் பயன் படுகின்றது. ருமேனியாவை ரஷ்யா கைப்பற்றிக் கொண்டால், ஜெர்மனிக்குக் கிடைக்கும் பெட்ரோல் அதற்குக் கிடைக்காமற் போகும். ஜெர்மனியின் அகம்பாவத்தை யொடுக்குவதற்குத் தேவையான இயந்திரங்களை இயக்குவிப்பதற்கு, ஏராளமான பெட்ரோல் ரஷ்யாவிற்குக் கிடைக்கும். இவை எல்லாம் கட்டாயம் நடை பெறத் தான் போகின்றன. ருமேனியாவும் செக்கோஸ்லொவேகியாவும் ரஷ்யர்கள் வசப்பட்ட பிறகு, ஒடெஸ்ஸாவின் உபயோகம் மேலும் அதிகப்படும். ஆகவே ஒடெஸ்ஸாவை ரஷ்யர்கள் மீண்டும் கைப்பற்றியது மகா முக்கியமானது. இந்த வெற்றியைப் பாராட்டி மார்ஷல் ஸ்டாலின், மார்ஷல் மரினேப்ஸ்கிக்கு விடுத்த தோர் செய்தியில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

“ஒடெஸ்ஸா கருங்கடலிலுள்ள மிகவும் முக்கியமான தோர் துறைமுகம். இந்நகரம் இப்போது விடுவிக்கப்பட்டிருக்கிறது. இந்த வெற்றி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். இது பற்றி நமது மகிழ்ச்சியையும் மரியாதையையும் தெரிவிக்க வேண்டி, கருங்கடல் கப்பற் படை 12 குண்டுகள் தீர்க்கும். அதே சமயத்தில் மாஸ்கோவிலும் 24 குண்டுகள் தீர்க்கப்படும். இதன் மூலம் ஒடெஸ்ஸாவைக் கைப்பற்றி விடுவித்த ரஷ்யப் படைகளுக்கு மரியாதை செலுத்தப்படும்.”

இந்நகரத்தை மீட்டுக் கொடுத்த, ரஷ்யக் காலாட் படைகள், குதிரைப் படைகள், இயந்திர சாரணப் படைகள் ஆகியவை அந் நகரைக் கடந்து, முன்னேறிப் போராடிக் கொண்டிருக்கின்றன.

கருங்கடலிலுள்ள துறைமுகங்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரிது ஒடெஸ்ஸா தான். அன்றியும் இது உக்ரெய்ன் மாகாணத்தில் மூன்றாவது பெரிய நகரம். இந்நகரை மீட்ட ரஷ்யர்கள் வீரம் ஓங்குக!

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

இந்தியா மீது ஜப்பான் படையெடுப்பா ?

இந்தியாவைத் தாக்க ஜப்பானியர்கள் முயற்சிக்கிறார்கள். பர்மா இப்போது ஜப்பானியர் வசமிருக்கிறது. ஆகவே, அங்கிருந்து தான் தாக்க முயற்சி செய்கிறார்கள். தாக்குவதற்கு இரண்டு வழிகளுண்டு. ஒன்று தெற்கேயுள்ளது. அரக்கானிலிருந்து சிட்டகாங்கைத் தாக்குவது. வங்காளத்தையுங் கூடத் தாக்கலாம். இந்த வழியாகத் தாக்க, சென்ற பிப்ரவரி மாதம் 4-ம் தேதியே ஆரம்பித்தார்கள், அப்போது அவர்களுடைய டாம்பீகப் பேச்சு பிரமாதமா யிருந்தது. 'சட்கா' நேரத்தில் சிட்டகாங்கைக் கைப்பற்றிவிடப் போவதாக வாய்ப் பந்தற் போட்டார்கள். 20 நாட்கள் நடந்து கொண்டிருந்த போரில், 5-வது டிவிஷனையும் 7-வது டிவிஷனையும் அடியோடு அழித்துவிட்டதாக நாள்தோறும் பிரசாரம் செய்து கொண்டே வந்தார்கள். முதல் நாள் அழிந்து போனதாகச் சொல்லப்படும் இந்தப் படைகள் எப்படி மறு நாளும் அழிக்கப்பட்டனவோ தெரியவில்லை. பத்மாசுரன் தலை போகப்போக, ஆட்டுத் தலையும், மாட்டுத் தலையும், மற்ற தலைகளும் உடலில் அமைந்து அவன் முருகனுடன் போராடியதாகப் புராணக் கதைகள் கூறுகின்றன. அது போல் முதல் நாள் அழிந்துபோன படைகள் மறு நாள் உயிர்த் தெழுந்தனவா? இல்லை. ஜப்பானியரின் பொய்ப் பிரசாரத்திற்கு இது ஒரு தக்க சான்றாக அமையும். இந்தப் படைதான் எதிரியின் கற்கோட்டையான புதிடாங்கைத் தாக்கிக் கைப்பற்றியது. இதைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு ஜப்பானியர்கள் 3,000 பேர்களுக்குமேல் பலியானார்கள். இது மட்டுமா? புதிடாங்குக்கும் மாங்டாவென்னும் மற்றோரிடத்திற்கும் 20 மைல் தூரம். வழியில் இரண்டு குகைப் பாதைகள் இருக்கின்றன. அவை மகா முக்கியமானவை. இவ்விரண்டையும் நமது படைகள் கைப்பற்றிக் கொண்டன. இன்னும் ஜப்பானியர்கள் அங்கே போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அங்குள்ள கேந்திர ஸ்தானங்க ளெல்லாம் நேசநாட்டினர் வசமிருக்கின்றன. ஆகவே, ஜப்பானியர்கள் கடுமையான சேதத்திற்கு உள்ளாகிறார்கள்.

இரண்டாவது வழி.

இரண்டாவது வழி வடக்கே யிருக்கிறது. காடுகள் அடர்ந்த மலை வழியாக மணிப்பூருக்கும் அஸ்ஸாமுக்கும் வருவது. தெற்கே தம் ஜம்பம் பலிக்கவில்லை. ஆகவே வடக்கேயுள்ள வழியில் புகுந்தார்கள். இம்பாலுக்குத் தெற்கேயுள்ள ஷின் மலைகளிலிருந்து அதற்குத் தெற்கிலும் தென்கிழக்கிலும் உள்ள சோம்ரா மலைகள் வரை அடர்ந்த காடுகள். இதன் நீளம் 200 மைல்கள். இந்த வழியாக வந்து இம்பால் கொஹிமா பகுதியில் மழைகாலம் ஆரம்பமாகும் முன்னதாகத் தாம் வேரூன்றிக் கொள்ள வேண்டுமென்பது தான் ஜப்பான் படையினரின் ஆசை. அங்கே ஊன்றிக் கொண்ட பிறகு, கல்கத்தாவிலிருந்து வடகிழக்கு அஸ்ஸாமுக்கு பிரமபுத்தரா ஆற்றை யொட்டிப் போகும் ரயில் பாதையையும் தரைப் பாதையையும் தாக்க வேண்டு மென்பது தான் அவர்களுடைய எண்ணமா யிருத்தல் வேண்டும். இந்த எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ளும் பொருட்டு, தெற்கே யிருந்தும், கிழக்கே யிருந்தும் வடகிழக்கே யிருந்தும் படைகளை அனுப்பி அஸ்ஸாமுக்கு ஆபத்தை யுண்டாக்கப் பார்த்தார்கள். தெற்கே யுள்ள டிட்டிம் பகுதியில், நமது முன்னணிப் படைகளுக்குப் பின்புறம் வந்து வளைந்து கொண்டு, நம் படைகளுக்கு சப்ளைகள் போக ஒட்டாதபடி தடுத்துவிட வேண்டுமென்பது தான் அவர்கள் எண்ணம். இது அவர்கள் அனுபவப்பட்ட போர்த் தந்திரமுறை. அரக்கானில் இவர்கள் இந்த முறையைக் கையாண்டார்கள்; ஆனால், இவர்களுக்கு அங்கே தோல்விதான் கிடைத்தது. கிழக்கேயுள்ள டாமு பகுதியில் முதலாவது, சப்ளை போக்கு வரவுப் பாதையைத் துண்டித்துவிட்டு, பிறகு, இம்பால் மீது படையெடுத்துப் போக வேண்டு மென்பது அவர்களுடைய எண்ணம். வடக்கே ஹோமலினில் ஜப்பானிய தள மொன்றிருக்கிறது. அங்கிருந்து ஜப்பானியப் படைகள் கிளம்பி மணிப்பூர் ரோட்டிலுள்ள கொஹிமாவை இரண்டு முறை தாக்கினார்கள். கொஹிமா, இம்பாலுக்கு வடக்கே 60 மைல் தூரத்திலுள்ளது.

இங்கே எதிரிக்கு ஒரு நல்ல வசதி ஏற்பட்டிருக்கிறது. மணிப்பூர் ரோட்டாகிய நமது போக்கு வரவுப் பாதை நமது பிரதமப் போர் முனையை ஒட்டி நெடுகப் போகிறது. அங்குள்ள மலைகள் தென் வடலில் இருக்கின்றபடியால், போராடுவதற்கு எதிரிகளுக்குச் சாதகமான இடமாக அமைகிறது. இந்த மலைகளுக்கு இடையேயுள்ள பள்ளத் தாக்குகளின் வழியாகத்தான் நமது படைகளுக்கு சப்ளைகள் போகவேண்டும். இந்த மலைகளில் ஒற்றையடிப் பாதைகள் உண்டு. இவற்றின் வழியாக மலைகளிலிருந்து கூட்டங் கூட்டமாக வந்து நம் சப்ளைகளைத் தடுக்க இலகுவா யிருக்கக்கூடும்.

இப்படிப்பட்ட போராட்டங்களில், முன்னேறிப்போய் எதிரி கூட்டங்களைக் கைப்பற்றுவது அவ்வளவு முக்கியமான காரியமல்ல. அதைவிட முக்கியமானது எதிரிப் படைகளை யழிப்பது. ஆகவே தான், நாம் டிட்டிமிலிருந்து வாபீசாக நேர்ந்தது. பின்வாங்கி, நமது படைகளுக்குப் பின்னே வந்து வளைக்க வந்த எதிரிப் படைகளோடு போராடினோம். இப்படிச் செய்யாதிருந்தால், வடக்கே யிருந்து வரும் ரோடு நமக்கு அடைபட்டிருக்கக் கூடும். இதற்கிடையில் நமது அணிவகுப் பொன்று வடக்கேயிருந்து கிளம்பி வந்தது. ஆகவே, இருபுறங்களிலும் உள்ள நம் படைகளிடை எதிரிகள் சிக்கிக் கொண்டார்கள். இதன் பயனாக ஜப்பானியப் படைகளுக்குப் பெருவாரியான நஷ்டம். இந்தப் பகுதியில், நமக்கு சப்ளைகள் வர ஒட்டாதபடி செய்வதற்கு பகீரதப் பிரயத்தனங்கள் செய்தார்கள். ஆனால் பலிக்கவில்லை. ஏராளமான சேதத்திற்கு உள்ளானது தான் மிச்சம். இதன் பயனாக, அவர்கள் இம்பாலைத் தாக்கிப் பிடிக்க வேண்டு மென்று கொண்டிருந்த நோக்கம் கலகலத்துவிட்டது.

இவை மட்டுமன்றி, வடக்கேயிருந்து கொஹிமாவை நோக்கி இரண்டு ஜப்பானியப் படைகள் முன்னேறி வந்தன. இப்போது நமது பாதுகாப்புப் படைகளோடு போராடவேண்டிய அவசியம் அவைகளுக்கு ஏற்பட்டுவிட்டது. கொஹிமா இப்போது நன்றாக அரண் செய்யப்பட்டிருக்கிறது. எதிரியின் நோக்கம் இன்னது தான் என்று இப்போது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. ஆகவே, நம் வசமுள்ள பகுதிகளைக் காப்பாற்றிக் கொள்ளுவதோடு, எதிரிப் படைகளை விரட்டுவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளை நமது படைத் தலைவர்கள் செய்திருக்கிறார்கள். இந்த மகா சிக்கலான நாட்டைப் பற்றி படையினர் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பகுதிகளில் போராடுவதற்கு நன்றாகவும் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய தைரியமும் போருணர்ச்சியும் மிகவும் உயர்வானவை.

மேலும், நமது படைகள் எதிரிக்குப் பின்புறம் காதா பகுதியில் போய் இறங்கியிருக்கின்றன. அங்குள்ள ரயில்வேக்களையும், படகுகளையும், எதிரி சப்ளை ஸ்தாபனங்களையும் நாசஞ் செய்துகொண்டு வருகின்றன. இதன் பயனாக எதிரிகளின் சப்ளை போக்குவரவு பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஜப்பானியர்கள் முன்னேறி வந்தால், தமக்கு சப்ளைகள் வராமாட்டாமல் திண்டாடும்படி நேரும். தமக்குப் பின்னே ஏற்பட்டிருக்கும் ஆபத்தைப் போக்குவதற்கு தம் படைகளைப் பிரித்து பின்னோக்கிப் போகச் செய்யவேண்டும். இந்தப் போர்த் தந்திர முறையின் பலாபலன் நாட் செல்லச் செல்லத் தான் தெரியும்.

மற்றொரு முக்கியமான விஷயம். நமது விமான பலம் வெகு உயர்வானது. அரக்கான் போர்முனையில் தம் திறமையை இது மெய்ப்பித்திருக்கிறது. இரண்டு நாட்களில் எதிரிகளுக்குச் சொந்தமான 20 விமானக் கூடங்களை அடுத்துவிட்டோ மென்றால், நம் விமானப் படையின் திறமைக்கு வேறு ஒரு சான்றும் வேண்டுமா?

(8-ம் பக்கம் பார்க்க)

ஜப்பானிய உள் நாட்டுப் பிரசார ஆராய்ச்சி

ரபாலில் பந்து விளையாட்டமும் உணவுப் பொருள் பயிராட்டமும்!

‘சர்க்கரை’ என்று எழுதி ஏட்டைச் சுவைக்கும் டோக்கியோ ஆனந்தம்!!

படத்தின் கோட்டைத் தாண்டியது படையெடுப்பாகுமா?

பர்மா போர்முனைக்கு கீழ் நாட்டு விமானப் படைத்தலைவர் மேஜர் ஜெனரல் ஸ்ட்ரேட்மேயர் விஜயம்.

அச்சுப் பிரசாரத்துக்கு, அச்சு நாட்டுப் பொய்ப் பிரசாரத்துக்கு டாக்டர் கோப்பல்ஸ் தான் குரு. அவர் சொல்வதைக் கடைப் பிடித்து, எல்லா அச்சு நிலையங்களும் பிரசார பாராயணம் செய்து வருகின்றன. அவர் அட்டகாச அத்தியாயத்தை மனனம் செய்யும்படி ஆணையிட்டால், அச்சு நிலையங்கள் அனைத்திலும் எக்காளம் ஊதுவதும், பேரிகை யடிப்பதும், வெற்றி கீதங்கள் பாடுவதும் வழக்கம். அவலக் குறி அத்தியாயத்தை அவர் எழுதி விட்டாலோ, எங்கு பார்த்தாலும் ஒரே ஓலம் தான். ஆனால் இந்த அத்தியாயம், நெருக்கடியான காலத்தில் சமயோசிதப்படி, பாராயணம் செய்யப்படும். ஜெர்மானிய மக்கள் யுத்த முயற்சியில் அதிக ஊக்கம் காட்ட வேண்டும் என்ற அவசியம் நேரிட்ட காலத்தில் தான், கோப்பல்ஸ் இந்த ராகத்தை எடுத்துக் கொள்வார். சென்ற சில காலமாக, பர்லின் நிலையத்திலிருந்து செய்யப்படும் உள் நாட்டுப் பிரசாரத்தில், அவலக்குறி அதிகரித்து வருகிறது; ஜெர்மனிக்கு இனி மேல் நேரக் கூடிய அபாயம் வற்புறுத்தப் படுகிறது; அந்த அபாயத்தைத் தடுப்பதற்காக ஜெர்மானிய மக்கள் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றி வியாக்யானம் செய்யப்படுகிறது. இதே பாடத்தை டோக்கியோ இப்போது படிக்க ஆரம்பித்திருக்கிறது.

ஜப்பானிய வாழ்வும், சிறப்பும் பிரியும் குறுக்குப் பாதையருகில் நிற்கிறார்களென்றும், தம்முடைய நாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்றால் சிறப்பான முறையில் உயிர் துறக்க வேண்டுமென்றும் டோக்கியோவிலிருந்து ஒலி பரப்பப்பட்ட ஒரு பேச்சில் கூறப்பட்டது. இது, பர்லின் நிலையம் சென்ற ஒரு வருஷமாகவும், அதற்கு மேலும், ஜெர்மன் மக்களுக்குச் செய்து வந்த பிரசாரத்தை நினைவூட்டுகிறது. இப்போது எதிரி நாடுகளின் தலை நகரங்களில் மகிழ்ச்சி கிடையாது; மனோ தைரியக் குறைவு தான் இருக்கிறது. ஏனென்றால், அநேக வருஷங்களாக முயற்சி செய்யப்பட்டு, சில வருஷங்களாக நடைபெற்று வரும் இந்த யுத்தத்தில், கடைசியாகச் சிறப்பான முறையில் இறப்பதற்குத் தலைவர்கள் தூண்டுகிறார்கள். இதிலிருந்து, தலைவர்களுடைய லட்சணமும் லட்சியமும் எப்படிப் பட்டவை என்று தெரிகிறது. ஏனென்றால், யுத்தத்தை ஆரம்பிப்பவர்கள் இறப்பதை லட்சியமாகக் கொண்டு ஆரம்பிப்பதில்லை. அது சிறப்பாக இறப்பதாயிருந்தாலும் சரி,ட அல்லது வேறு விதமாக இறப்பதாயிருந்தாலும்சரி.

குவஹராவின் கட்டுரை

இதனால் ஜப்பானியப் பிரசாரம் எப்படிப்பட்ட போக்கில் இப்போது போய்க் கொண்டிருக்கிறதென்று விளங்குகிறது. இந்தப் பிரசார மாறுபாட்டுக்கு என்ன காரணம்? நேச நாடுகள் பல போர் முனைகளில் அடைந்து வரும் வெற்றிகள் தான். இந்த விஷயம் ‘கைசோ’ என்ற ஜப்பானிய மாத சஞ்சிகையில் நன்றாக விவரித்துக் கூறப் பட்டிருக்கிறது. மூன்று மாதங்களுக்கு முன், அதாவது சென்ற டிசம்பரில், வெளியான இந்த சஞ்சிகையில், ஜப்பானிய கடற் படைப் பிரசார இலாகாவின் தலைவர், எட்சூசோ குவஹரா (Etsuzo Kuwahara) ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் ஆச்சரியப் படும்படியாக, கொஞ்சம் கூட தயங்காமல், யாதொன்றையும் மறைக்காமல், உள்ளதை உள்ளவாறு கூறியிருக்கிறார்.

நமது எதிரிகள் முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகள் செய்யாமல் இருக்கும்போது, நாம் சந்தர்ப்பத்தை உபயோகித்து முன்னாலேயே முடிவு செய்த திட்டத்தின்படி, திடீரென்று தாக்கினோம். பிறகு, தகுதியான தளங்கள் ஏற்படுத்திக் கொண்டு நாம் நம்மைப் பாது காத்துக் கொள்ளும் நிலையில் நின்றோம். இப்போது எதிரிகள் நம்முடைய தளங்களைக் கைப்பற்றிக் கொண்டு நம்மை எதிர்த்துத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது மிகக் கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம். இது மிகவும் கஷ்டமான காரியம் தான், என்று சொல்லுகிறார்.

ஜப்பானியப் பிரசாரத் தலைவர் இத்தோடு விட்டுவிடவில்லை. தம்முடைய நாட்டு மக்களுக்காக என்று எழுதிய கட்டுரையில், நேச நாட்டினர் பசிபிக் பிரதேசத்தில் செய்து காட்டிய யுத்த தந்திர முறைகளைப் பாராட்டி யிருக்கிறார். சாலமன்ஸ் தீவுகளில் நேச நாட்டுப் பட்டாளங்கள் இறங்கியது ‘மிக அருமையான யுத்த தந்திரம்’ என்று ஒத்துக் கொண்டிருக்கிறார். இதற்கு மேல் அவர் கூறி யிருப்பது எல்லோருக்கும் ஆச்சரியத்தை விளைவிப்பதா யிருக்கிறது.

குவஹராரா எழுதுகிறார்: நேச நாட்டினர் இன்னும் கொஞ்சம் முயற்சி செய்திருந்தால், டோக்கியோவைத் தாக்கியிருக்கலாம் என்று அநேகர் நினைத்தார்கள். ஆனால் நேச நாட்டினர்க்கு டோக்கியோவை விட, டச்சுக் கிழக்கிந்தி த் தீவுகளே மிகவும் முக்கியம். டோக்கியோவை சரிபாதி சிதறடித்து விடலாம். ஆனால் ச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் நம்மிடம்

இருக்கும் வரைக்கும், வேண்டிய 'சப்ளை' சாமான்கள் அபரிமிதமாக நமக்கு வந்து கொண்டே யிருக்கும். இந்தத் தீவுகளை அவர்கள் முழுவதும் கைப்பற்றி விட்டால், இந்த யுத்தத்தை முடிப்பதற்கு வேண்டிய பலம் ஜப்பானுக்கு இல்லாமற் போய் விடும்.

குவஹராவின் உண்மையான வார்த்தைகளின் நோக்கமென்ன? உள்ள அபாயத்தை வெள்ளையாகத் தெரிவித்து, ஜப்பானிய மக்களின் மன வுறுதியைப் பலப்படுத்துவது தான். நேச நாட்டினர் ஏபாளமான விமானங்கள் கொண்ட சிறந்த ஆகாயப் படையை வைத்திருக்கிருர்களென்றும், அவர்கள் பல வெற்றிகளடைந்து வருகிருர்களென்றும், ஆகையால் ஜப்பானியர்கள் மிகவும் ஜாக்கிரதையா யிருக்க வேண்டு மென்றும், அவர் மேலும் கூறுகிருர். எப்படியாவது 'டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளை நேச நாட்டினர் கைப்பற்ருமல் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று அவர் முடிவாக எச்சரிக்கை செய்கிருர்.

ஜப்பானியர் கலக்கம்

இந்தக் கட்டுரையிலிருந்து ஒரு விஷயம் விளக்கமாகத் தெரிகிறது. பசிபிக் பிரதேசத்தில் நமக்கு ஏற்பட்ட வெற்றிகளால், ஜப்பானியத் தலைவர்கள் கலகலத்துவிட்டார்கள் "ஜப்பானிய ஏகாதிபத்தியச் சரித்திரத்திலேயே மிக நெருக்கடியான நிலைமை" வந்துவிட்டதாக முதன் மந்திரி டோஜோ சமீபத்தில் கூறியிருக்கிருர். உள்ளதைக் கூறி உள்ளமட்டும் மக்களுடைய முயற்சியைக் கைப்பற்றவேண்டும் என்பது தான், ஜப்பானிய உள்நாட்டுப் பிரசார நோக்கம்.

இதனுல், உள்நாட்டுப் பிரசா மெல்லாம் உண்மைப் பிரசாரம் என்று நாம் நினைத்துவிடக் கூடாது. ஒவ்வொரு சமயத்தில் உண்மை, ஒரோர் சமயத்தில் உண்மைக்கு மாறுபாடான விஷயங்கள்; சில சமயங்களில் முழுப்பூசனிக்காய்ப் பொய்கள்—இ படியாக பலவிதமாக சமயத்துக்கும் மக்கள் மனோ நிலைக்கும் தகுந்ததுபோல ஜப்பானியப் பிரசாரம் நடந்து வருகிறது. 'கைசோ' என்ற மாதப் பத்திரிகையில் குவஹரா என்பவர் எழுதிய கட்டுரையைப் பற்றிக் குறிப்பிட்டோம். இதற்கு மாறுபாடாக, 'அசாகி' என்ற மற்ருெரு ஜ பானியப் பத்திரிகையில் ஒரு நிருபர் எழுதியிருப்பதைச் சற்று கவனிக்கலாம். டோக்கியோ நிலையத்தால் அந்நிருபர் கட்டுரை 15 நாட்களுக்கு முன், அதாவது மார்ச்சு 14-ந் தேதி ஒலி பரப்பப்பட்டது. நிருபர் கூறுவது வேடிக்கையிலும் வேடிக்கையான விஷயம். ஜப்பானியக் கடற் படைத் தளமாகிய ரபாலைப் பற்றி, அவர் கூறுகிருர்:

"ரபால் முன்னிருந்ததைப் போல அமைதியாக இருக்கிறது. விமான ஓட்டிகளும் விமான நிலையத் தரைச் சிப்பந்திகளும் 'பேஸ் பால்' ஆட்டமும், 'பிங் பாங்' மேசைப் பந்து விளையாட்டும் ஆடிக் கொண்டிருக்கிருர்கள். இதல்லாமல் காய்கறி வகைகளைப் பயிர் செய்து வருகிருர்கள்; தோட்ட வேலையில் ஈடுபடுகிருர்கள்."' அவ்வளவு நிம்மதியான இடமாம் ரபால் என்ற தளம். முக்கியமான இந்தத் தளமாவது ஒரு சாந்தியை அனுபவித்துக் கொண்டு வருகிறது என்ருல், ஜப்பானிய மக்களுக்கு ஆறுதலாயிருக்கும் என்பது தான் இந்தப் பிரசாரத்தின் நோக்கம். ஆனுல் ரபாலினுடைய உண்மையான நிலைமை என்ன? அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் அடிக்கடி இத் தளத்தைத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. டோக்கியோ வானெலி நிலையம் பந்தய விளையாட்டுகளைப் பற்றியும்,காய்கறிகள் விவசாயத்தைப் பற்றியும் ஒலிபரப்பிக் கொண்டிருந்த அன்றையத் தினம், இதற்கு முன்னில்லாத அவ்வளவு கடுமையான வெடிகுண்டு மாரியை அமெரிக்க விமானங்கள் பொழிந்தன. இப்படிப்பட்ட வெடிகுண்டு தாக்குதல்களைப் பற்றி டோக்கியோ நிலையப் பேச்சாளர் ஒருவர் சமீபத்தில் குறிப்பிட்டிருக்கிருர்:

"நம்முடைய தாய் நாட்டுக்கு அருகாமையில் உள்ள இரும்பு போன்ற நமது பாதுகாப்புச் சுவற்றை எதிரிகள் முரட்டுத்தனமாகத் தாக்குகிருர்கள். அவர்களுடைய தாக்குதல்களின் வேகம், நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது."

இந்த ஆச்சரியத்தால் ஏற்பட்ட பிரமிப்பில் தான், உற்சாகமான விளையாட்டுகளும் உணவுப் பொருள் பயிராட்டங்களும் நடைபெறுகின்றன போலும்.

எல்லையைக் கடந்தது

இபபடியே, உள்ளதை மறைப்பதும், இல்லாததைக் கற்பிப்பதும் சிறிய விஷயங்களைப் பிரமாதப் படுத்துவதும், ஜப்பானியப் பிரசாரத்தின் முழுக் கால வேலையாய்விட்டது. இப்போது, சமீபத்தில் ஜப்பானியத் துருப்புகள் பர்மா எல்லையைக் கடந்து இந்திய எல்லையில் கால் வைத்துவிட்டவனல்லவா? இதை ஒரு பிரம்மாண்டமான படையெடுப்பாக டோக்கியோவும் பர்லினும், இதர கோப்பல்ஸ் சிஷ்ய நிலையங்களும் சங்கநாதம் செய்கின்றன. உதாரணமாக, 7 நாட்களுக்கு முன், அதாவது மார்ச் 22-ந் தேதி, சைகான் நிலையம் "ஜப்பானியப் பட்டாளம் இந்திய நிலத்தில் போர் புரிந்து கொண்டு வருகிறது என்று பெருமை பேசுகிறது. இந்திய எல்லைக்குள் ஜப்பானியர் கால் வைத்தது பெரும் படையெடுப்பாகா தென்றும், கூடிய சீக்கிரம் முன் வைத்த காலைப் பின் வைத்து ஜப்பானியர் ஓடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும், யுத்தப் போக்கைக் கவனித்து வருபவர்கள் அறிவார்கள். சிண்ட்வின் நதிக்கு இப்பாலுள்ள பூகோளப் படத்தின் கோடு வரையறையை, தான் தாண்டிவிட்டதால், இந்தியாவைப் படையெடுத்துவிட்டதாக அச்சு நிலையங்கள் கூறும் பெருமை எல்லாம், வீண் பெருமைதான். ஜப்பானியர்கள் தலை கீழாக நின்ருலும், இந்தியாவைக் கைப்பற்ற முடியாது. நேச நாட்டுத் துருப்புகள் எப்படிப்பட்ட எதிர்ப்பையும் வீழ்த்தி முறியடிக்கத் தயாராகி இருக்கின்றன. பூகோளக் கோட்டைத் தாண்டியதாலேயே லட்சியத்தை அடைந்துவிட்டதாக ஜப்பானியர்கள் கருதுகிருர்கள். சர்க்கரை என்று ஏட்டில் எழுதி அதைச் சுவைத்து ஆனந்தப் படுவதைப் போலிரு கிறது டோக்கியோவின் பிரசாரம்.

—சென்னை வானெலி நிலையத்திலிருந்து 1944-ம் ஹு மார்ச்சுமீ 29உயில் **மிஸ்டர் டி. ஏ. வி. நாதன்** ஒலி பரப்பிய பேச்சு.

தென்னுற்காடு ஜில்லா சிற்றரசூர் வாசக வட்டத்தில நடை பெற்ற தேசியப் போர் முனை மகா நாட்டிற்கு, ஜில்லா அமைப்பாளர் திரு. எல். கே. கோவிந்த ராஜலு அவர்கள் 1944-ம் ஹு மார்ச்சுமீ 10உ விஜயம் செய்தபோது எடுத்த படம்.

இந்திய கப்பற்படை உத்தியோகங்கள்

(இந்திய கப்பற்படை உத்தியோகஸ்தர் எழுதியது.)

கப்பற் படையைக் குறித்து தவறான கருத்துக்கள் இருக்கின்றன. இந்தியா ஒரு பரந்த நாடு. அதன் கடற் கரையும் மிகவும் நீளமானது. சமீப காலம் வரையிலும், இந்திய கடற் கரையையும் வியாபாரக் கப்பல்களையும் பாது காப்பதற்கு, பிரிட்டிஷ் கப்பற்படையின் உதவியையே எதிர் நோக்கிக் கொண்டிருக்க வேண்டி யிருந்தது. இப்போது ஒரு பெரிய திறமை வாய்ந்த இந்திய கப்பற்படை ஏற்பட்டு விட்டது. இந்தக் கப்பற்படையை இந்திய மாலுமிகள் நிர்வகிக்கிறார்கள். இந்திய வியாபாரக் கப்பல்களையும் கடற்கரையையும் இந்தக் கப்பற்படை பாதுகாக்கிறது. இது பற்றி இந்தியா பெருமிதங் கொள்ளுவது நியாயந் தான்.

சமிக்ஞை பகுதி

கப்பற் படையில் பல பகுதிகள் உண்டு. அவற்றுள் ஒன்று செய்திப் போக்கு வரவுப் பகுதி. இந்தப் பகுதி, சமிக்ஞைகள் மூலமும், கம்பியில்லாத் தந்தி மூலமும் செய்திகள் வெளியே அனுப்பவும் வெளிச் செய்திகளை ஏற்கவும் வேண்டும். இந்தச் செய்திப் போக்கு வரவு வசதிகளில்லாமல், எந்தக் கப்பலும் இயங்க முடியாது. சமீபத்தில் உள்ளவர்களுக்குச் செய்திகள் தெரிவிக்க வேண்டுமானால், கொடிகளைக் கொண்டும் விளக்குகளைக் கொண்டும் தெரிவிக்கிறார்கள். என்றாலும் பெரும்பாலும் செய்திகள் கம்பி யில்லாத் தந்தி மூலம் தான் அறிவிக்கப்படுகின்றன. கிழக்குப் பகுதியில் எல்லாச் செய்திப் போக்கு வரவுகளுக்கும் இந்தியக் கப்பற் படைதான் பொறுப்பாகும். ஆப்பிரிக்கா, பாரசீக வளைகுடா, செங்கடல், முதலிய வற்றிலுள்ள துறைமுகங்களிலிருக்கும் கப்பற் படைகள் இந்தியர்களாலேயே நிர்வகிக்கப்படுகின்றன. இந்தியக் கரையிலும், ஜப்பானியர்களை விரட்டிய பிறகு சிங்கப்பூர் வரையிலுங் கூட, இந்தியர்கள் தான் கப்பற் படையை நிர்வகிப்பார்கள்.

செய்திப் போக்கு வரவு ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களின் பொறுப்பு மகத்தானது. இந்தச் செய்திப் போக்கு வரவுகளெல்லாம் ஆங்கில மொழியில் தான் நடை பெறுகின்றன. ஆகவே இவ்வேலை செய்கிறவர்கள் இளைஞர்களாகவும், புத்திசாலித் தன முள்ளவர்களாகவும், ஆங்கிலத்தில் பேசவும், படிக்கவும், எழுதவும் தக்க கல்வி யறிவு உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறியவர்களாகத் தான் இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. அந்த வகுப்பளவிற்குக் கற்றவர்களாயிருந்தால் போதுமானது.

கம்பி யில்லாத் தந்தியின் பயன்

யுத்தத்திற்கு முன்பு கம்பியில்லாத் தந்தி பயங்கரமான முறையில் இயங்கிக் கொண்டிருந்தது. யுத்த காலத்தில் இது முக்கியமான வேலை செய்கிறது. யுத்தத்திற்குப் பிறகு, இது மேலும் அதிகமாகப் பயன்படும். இந்தப் பெரும் கைத் தொழில், இந்தியாவில் மேலும் பெருகும். விற்பனைக்காகக் கம்பியில்லாத் தந்தி இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கு, தொழிற்சாலைகள் விருத்தியாகும். செய்திகளையும் வினோதப் பொழுது போக்குகளையும் ஒலி பரப்பும் நிலையங்கள் பல தோன்றும். இந்தத் தொழிலுக்குத் தொழிலாளர்கள் பெரும் படையொன்று வேண்டியிருக்கும். பெருகிக் கொண்டிருக்கும் ஒரு தொழிலில் ஒரு நல்ல வேலைக்கு ஒருவர் தன்னைத் தகுதி செய்துகொள்ளுவது என்பது, முடியாத காரியம்.

கண்டு பிடிக்கப்படும் புது விஷயங்கள்

யுத்த காலத்தில் பல புதுப் புது விஷயங்கள் கண்டு பிடிக்கப் பட்டுக் கொண்டே வருகின்றன. இவை இப்போது அரசாங்கத்தாருக்கு மட்டுந்தான் பயன் படுத்தப்படுகின்றன. ஆகவே, தூரதிருஷ்டி முதலிய பல புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டவற்றை இராணுவத்தில் சேர்ந்துள்ளவர்கள் மட்டுந் தான் கற்றுக் கொள்ளக் கூடும்.

சமிக்ஞை பள்ளிக்கூடம்

இந்தச் செய்திப் போக்கு வரவுப் பகுதியைச் சேர்ந்தவர்களை பம்பாயில் தான் பயிற்றுவிக்கிறார்கள். இந்தப் பயிற்சி 6 மாத காலம் நடை பெறுகிறது. பம்பாயில் சிறந்த தோர் சமிக்ஞை பள்ளிக் கூடமிருக்கிறது. வெகுவாகச் சிந்தித்து ஏராளமான பொருட் செலவின் மேல், இது தலை சிறந்ததோர் ஸ்தாபனமாக அமைந்திருக்கிறது. இங்கிலாந்தைத் தவிர வேறெங்கும் சமிக்ஞை பள்ளிக் கூடம் இதுபோலக் கிடையாது. இங்கே சிறந்த முறையில் பயிற்சி யளிக்கப்படுகிறது. இங்கே பயிற்சி பெறுகிறவர்கள் வசதியோடும் சந்தோஷமாகவும் இருப்பதற்கு வேண்டிய அனைத்தும் செய்யப் பட்டிருக்கின்றன. ஏனென்றால், இந்தப் பயிற்சிக்கு விசேஷத் திறமை வேண்டும். ஆகவே, இப்பயிற்சி பள்ளிக்கூட வகுப்பு அறைகளிலே தான் நடை பெறுகின்றது. ஆகவே, இந்த மாலுமிகளின் உடல் நிலை நன்றாயிருக்கும் பொருட்டு, கால் பந்தாட்டம், 'ஹாக்கி', 'கிரிக்கெட்', 'வாலி பால்', குத்துச் சண்டை, நீச்சு முதலிய உடற்பயிற்சி விளையாட்டுக்களில் கவனம் செலுத்தப்படுகிறது. என்றாலும், அவற்றை விளையாடத்தான் வேண்டு மென்ற நிர்ப்பந்தம் கிடையாது.

தினசரி நடை முறை

மாலுமியின் வாழ்க்கை கஷ்டமானது என்று அநேகர் சொல்லுகிறார்கள். சமிக்ஞை பள்ளிக்கூடத்தில் நாள் தோறும் நடைபெறும் முறையாவது:— காலையில் 6-30 மணிக்கு எழுந்து, 40 நிமிஷங்கள் உடற் பயிற்சி செய்யவேண்டும். பிறகு நீராடி, க்ஷவரம் செய்து கொண்டு, உடுத்திக் கொண்டு அணி வகுப்பில் நிற்கவேண்டும். அணி வகுப்பு முடிந்த பிறகு, இசைக் கேற்ப அடி வைத்து நடந்து போய்ப் பயிற்சி சாலை யறைக்குப் போக வேண்டும். மாலை 4-மணிக்கு மேல் அவரவர் தம் இஷ்டம் போல் எங்கு வேண்டுமானாலும் போகலாம்; விளையாடலாம்; கடிதங்கள் எழுதலாம்; படக் காட்சிகளுக்குப் போகலாம். 'உங்களுக்கு வேலையில்லாத போது என்ன செய்கிறீர்கள்? நண்பர்களைக் காணப் போகின்றீர்களா?, உலாவச் செல்லுகிறீர்களா?' என்று கேட்டால், அவர்கள், 'நாங்கள் வெளியே போக வேண்டிய அவசியமே கிடையாது; எங்களுக்கு வேண்டிய அனைத்தும் எங்கள் பள்ளிக் கூடத்திலேயே இருக்கின்றன,' என்று தான் பதில் சொல்லுவார்கள். இந்தப் பள்ளிக் கூடத்தில் ஒரு புதிய 'கான்டீன்' ஆரம்பித்திருக்கிறார்கள். அங்கே தினசரிப் பத்திரிகைகளும் வார சஞ்சிகைகளும் இலவசமாய்க் கிடைக்கின்றன. ஒரு இலவச புத்தக சாலையும் அங்கே யுண்டு. அடிக்கடி ஆடல் பாடல் கச்சேரிகளும், படக் காட்சிகளும் விநோதக் காட்சிகளும் நடை பெறுகின்றன. அந்தக் 'கான்டீன்' கடையில், சிகரெட்டுகள், தேநீர் முதலிய அவசியமான வஸ்துக்கள் கிடைக்கின்றன. இவை இலவசமாகக் கிடைப்பதில்லை. ஆகவே, வெளியே போக வேண்டிய அவசியமே அவர்களுக்குக் கிடையாது.

ஒரு இந்தியக் கப்பற் படை யதிகாரி கூறியதாவது:—

கப்பற் படையிற் சேர்ந்துள்ளவர்கள் 2,000 பேர்களைத் தனித் தனியாகப் பார்வை யிட்டிருக்கிறேன். அவர்களை நான் ஒரே கேள்வியைத் தான் எப்போதும் கேட்டுக் கொண்டு வந்தேன். அதாவது, கப்பற் படையில் நீங்கள் ஏன் சேருகிறீர்கள்? என்று நான் கேட்பது வழக்கம். இதற்குப் பல வகை விசித்திரமான மறு மொழிகள் எனக்கு கிடைத்தன. ஒருவர், தன் மாமியாருடன் கோபித்துக் கொண்டதால், கப்பற் படையில் சேர்ந்ததாகக் கூறினார். (1) பயன் படத் தக்கதோர் தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டும்; (2) கஷ்ட நஷ்டங்களைப் பொருட் படுத்தாது, உடல் வலிமையுடன் உலகத்தைச் சுற்றிக் காண வேண்டுமென்ற ஆசை, ஆகிய இந்த இரண்டு காரணங்களில் ஒன்றைத் தான் பெரும்பாலோர் கூறினார்கள். பிற நாடுகளையும் பிற நாடுகளில் வசிக்கும் மக்களையும் கண்டு உணர்வதை விட, உயரிய கல்வி வேறெதுவும் இல்லை. சமாதான காலத்தில் பணக்காரர்கள் பிரயாணத்தின் பொருட்டு கோடிக் கணக்காகச் செலவிடுகிறார்கள். இவர்கள் வியாபார நிமித்தமாக மட்டும் பிரயாணம் செய்வதில்லை. தம் மனம் விரி வடையவும், பிற நாட்

வரின் கஷ்டங்களை உணர்ந்து, அந்த அனுபவத்தைக் கொண்டு தம் கஷ்டங்களைத் தீர்த்துக் கொள்ளவும் பிரயாணம் செய்கிறார்கள். ஒரு இளைஞர் உலகத்தைச் சுற்றிப் பார்க்க, கப்பற் படையிற் சேருவதைத் தவிர, வேறு ஒரு வழி யிருக்கிற தென்று எனக்குத் தோன்ற வில்லை; இதன் மூலம் சுற்றுப் பிரயாணம் செய்வதற்கு ஒரு சல்லிக் கூடச் செலவில்லை. பிரிட்டிஷ் தீவுகளிலும், ஆஸ்திரேலியாவிலும், அமெரிக்காவிலுங் கூட, இந்தியக் கப்பல்கள் கட்டப்பட்டு வருகின்றன. இந்தக் கப்பல்களை இந்தியாவுக்குக் கொண்டுவந்து சேர்க்கிறவர்களும் இந்தியர்கள் தான். இவர்கள் அந் நாடுகளுக்குப் பிரயாணிகளாகப் போனவர்கள் தம் கப்பல்கள் முடிவாகிற வரை அதாவது சில வாரங்கள் வரை அங்கேயே காத்திருக்கிறார்கள்.

வெளி நாடுகளில் இந்திய மாலுமிகள்

அந்தச் சமயத்தில் அவர்களின் பொருட்டு அங்கே களியாட்டங்கள் நடைபெறுகின்றன. அங்கே யிருந்து திரும்பிய மாலுமிகள், தமக்கு அங்கே நடைபெற்ற நல்லுபசரிப்புகளைக் குறித்துக் கூறுகிறார்கள். வெளி நாட்டிலிருந்து ஒரு கப்பலை இந்தியாவுக்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டு மென்னும் செய்தி பரவிய வுடனே, அதைப் போய்க் கொண்டு வருகிறதற்கு, நூற்றுக் கணக்கான மனுக்கள் வந்து சேருகின்றன.

இங்கிலாந்தில் வயது வந்தவர்கள் அனைவரும் படைகளில் பதிவு செய்து கொள்ள வேண்டு மென்னும் கட்டாயமிருக்கிறது. இந்தியாவில் இந்த நிர்ப்பந்தம் கிடையாது என்பது தெரியும். இந்திய கப்பற் படையில் உள்ளவர்கள் தாமாகவே சேர்ந்தவர்கள் என்றும் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, அவர்களிடம் நன் மதிப்பும் மரியாதையும் இயற்கையாகவே உண்டாகும். எல்லா வகைகளிலும் உபசரிக்கிறார்கள்.

கப்பற் படையில் உணவு

கப்பற் படையில் அளிக்கப்படும் உணவு நன்று யில்லை யென்று என்னிடம் ஒருவர் கூறினார். சமீபத்தில் உணவு வகைகள் திருத்தி யமைக்கப் பட்டிருக்கின்றன. சைவ உணவு, சாதாரண உணவு என இரு வகை உணவுகள் வழங்கப்படுகின்றன. நம் படையினருக்கு வேண்டிய வகை உணவை வழங்குவதற்கு எல்லா வகைகளிலும் முயற்சிக்கப் படுகிறது. ஒரு மேசையில் 20 பேர்கள் உட்கார்ந்து உணவருந்துகிறார்கள். சமீபத்தில் ஒரு கமிட்டி கூட்ட மொன்றை நாங்கள் நடத்தினோம். ஒவ்வொரு பந்தியைச் சேர்ந்தவர்களும் தத்தம் கோஷ்டியினரின் தேவைகள் எவை என்று எடுத்துக் கூறினார்கள். அவை அனைத்தும் நிறைவேற்றப் பட்டன. மீன் வேண்டு மென்றார்கள்; ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் மீன் உணவு பரிமாறப் படுகிறது. மாட்டிறைச்சி வேண்டுமென்றார்கள்; இப்போது ஆட்டிறைச்சி மட்டுந் தான் வழங்கப்படுகிறது. பாதமாவது, பழமாவது ஞாயிறு தோறும் வழங்கப்படுகிறது.

நாள்தோறும் ஒரு குவளை நிறைய பால் ஒவ்வொருவருக்கும் கிடைக்கிறது. உணவில் ஏதேனும் குறைபாடுகள் உண்டா என்று விசாரிக்கும் பொருட்டு, ஒவ்வொரு உணவு நேரத்திலும் உத்தியோகஸ்தர் ஒருவர் வந்து பார்வை யிடுகிறார். உணவின் அளவைப் பற்றியோ, தன்மையைப் பற்றியோ, சமையல் பாகத்தைப் பற்றியோ சென்ற 5 மாத காலத்தில் ஒரு வராவது என்னிடம் முறை யிட்ட தில்லை. "என் சப்பாத்திகளுள் ஒன்றை இவர் எடுத்துக்கொண்டார்" என்ற முறை யீடுகள் தான் அடிக்கடி எனக்கு வரும்.

மாலுமிகளின் உடல் நிலை

நமது மாலுமிகளின் உடல் நிலையைக் காப்பாற்றுவது, இயற்கையாகவே நமக்கும் நல்லது தான். ஒரு வைத்தியர் எப்போதும் ஆயத்தமா யிருக்கிறார். அவரை எப்போது வேண்டுமானாலும் காணலாம். 8-மணிக்கு, நோயாளிகள் அணிவகுப்பு நடைபெறும். அப்போது நோயாளியா யிருக்கும் மாலுமி, நோய் குணமாகும் வரை வேலைக்கு வராதிருக்கும்படி அனுமதிக்கப்படுவார்.

இப்போது சம்பள விஷயத்தைப் பற். கவனிப்போம். செய்திப் போக்கு வரவு இலாக்காவைச் சேர்ந்த சிப்பாய்க்கு ரூ. 60 ஆரம்பச் சம்பளம். இங்கே ஒரு விஷயத்தை நீங்கள் மனதில் இருத்த வேண்டும். இந்தச் சம்பளம் ரொக்கமாக கொடுக்கபபடுவது மட்டுமன்றி, இருப்பிடமும், உடுப்புக்களும், உணவும், மற்ற விநோத காட்சிகளும் இலவசமாகப் பெறுகிறார்.

நன்மைகள்

தன் சொந்த ஊரை விட்டு வெகு தூரத்திற்கப்பால், ஒரு இளைஞர் சிவில் உத்தியோகத்தில் ஒருவர் இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அவர் வீட்டு வாடகை கொடுக்க வேண்டும். உணவு, உடைகள், பிரயாணக் கட்டணங்கள் முதலியவற்றிற்கும் அவர் செலவு செய்தாக வேண்டும். இவற்றிற்கு ரூ 60-க்கு மேலாகவே பிடிக்கும். கப்பற் படையில் ரூ. 60 சம்பளத்தில் உத்தியோகம் பார்ப்பது, சிவில் உத்தியோகத்தில் ரூ. 120 சம்பளத்தில் வேலை பார்ப்பதற்குச் சமமாகும். "மாலுமிகளுக்குக் கவலையே கிடையாது. அரிசி விலை உயர்ந்தாலும், துணி விலை உயர்ந்தாலும், படக்காட்சிக் கட்டணங்கள் உயர்ந்தாலும் மாலுமிக்குக் கவலையே கிடையாது. இவர்களுக்கு மாதம் ஒரு முறை சம்பளம் பட்டுவாடா செய்யப்படுகிறது. ஒரு நீண்ட அறையின் ஒரு கோடியில் சம்பள பட்டுவாடா நடை பெறுகிறது. பிறகு நீண்டதோர் மேசையை யொட்டி, அவர்கள் போக வேண்டும். அம்மேசைக் கருகில் வண்ணானும், தையற்காரரும், சக்கிலியரும், நாவிதரும் உட்கார்ந்திருக்கின்றனர். கடைசியில் ஒரு சிறு மேசை. அங்கே இரண்டு தபால் குமாஸ்தாக்கள் இருக்கிறார்கள். படையினரின் குடும்பங்களுக்குப் பணம் அனுப்ப நமூனாக்களை அவர்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். இந்த சமிக்ஞை பள்ளிக்கூடத்திலுள்ள 18 வயது மாணவர்கள் பலர், தம் கைம்பெண்ணான தாய்மார்களையும், தங்கைமார்களையும் பாராமரிப்பதுடன், தம்பியரைப் படிப்பிக்கவும் செய்கிறார்கள்.

மிகச் சிறந்த தருணம்

உங்கள் பள்ளிக்கூட வாழ்க்கை விரைவில் முடிந்து விடும். இனி என்ன செய்ய வேண்டு மென்று நீங்கள் தான் முடிவு கட்ட வேண்டும். இப்போது உங்களில் சிலர் இந்தியக் கப்பற் படையிற் சேருவதைக் குறித்து ஆலோசிப்பீர்களென்று நம்புகிறேன். இது மிகச் சிறந்த தருணம். ஆரோக்கியமாகக் கவலை யில்லாது வாழலாம். பயன் படத்தக்க தோர் தொழிலைக் காப்பாற்றிக் கொள்ளலாம். உலகத்தைச் சுற்றிப் பார்க்கலாம். பொருளாதார சுயேச்சையை உடனடியாகப் பெறலாம். இப்போது, எனக்கு ஏராளமான இளைஞர்கள் தேவை. அவர்கள், இளைஞாகளாகவும், அறிவுத் திறம் மிக்கவர்களாகவும், கற்றவர்களாகவும், 17½-க்கு மேல் 24 வயதிற்குட்பட்டவர்களாகவும், ஆங்கிலம் நன்றாகப் பேசக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

இந்த யுத்தத்தில் ஜப்பானியர் வெல்ல முடியாதென்பது உறுதி. இதுபற்றி மேன்மை தங்கிய சென்னை கவரனவர்கள் சமீபத்தில் திருப்பதியில் கூறியதாவது :—

"எதிரிகளுக்குச் சிற்சில வெற்றிகள் கிடைத்திருக்கலாம். அதனால் நமக்குச் சில அசௌகரியங்கள் ஏற்படக் கூடும். இது மிகவும் அற்பமான தாக்குதல் என்று தான் நான் கருதுகிறேன். இதனால் பிரமாதமான பலன்கள் எதுவும் விளைந்துவிடாது. எதிரிக்கு அங்கங்கே கிடைத்த வெற்றிகள் தாற்காலீகமானவை தான். தரையில் மகா தீரத்தோடு ஜப்பானியர்கள் போராடக் கூடியவர்கள் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பிடிவாதமும் திறமையும் முள்ளவர்கள். மரணத்தைக் குறித்தே அவர்கள் கவலைப் படுவதே கிடையாது. நமக்கு எதிரிகளாயிருந்த இத்தாலியர்களைப் போல அவர்கள் தடுமாறுவதில்லை. என்றாலும் ஜப்பானியர்கள் விமான பலத்திலும் கப்பல் பலத்திலும் மட்டமானவர்கள் தான். அவர்கள் கைப்பற்றியுள்ள நாடுகளெல்லாம் நெடுந்தூரம் பரவி யிருப்பதனால், அவற்றைப் பாதுகாப்பதுபற்றி மிகவும் அச்சங் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தீவாகக் கைப்பற்றிக் கொண்டிருப்பது நமது நேச தேசப் படையினரின் நோக்கமல்ல; ஆனால், அவர்கள் போக்கு வரவுப் பாதைகளைத் தாக்கி, அவர்களை யழித்து க்கடைசியாக ஜப்பானையே நாசமாகக வேண்டு மென்பது தான். இவ்வாறாக, பல வருஷங்களுக்கு முன்னதாக, அல்லது மாதங்களுக்கு முன்னதாகவாவது யுத்தத்தை முடிவுபெறச் செய்யலாம்."

கெடுவான் கேடு நினைப்பான்!

கெடுவான் கேடு நினைப்பான் என்றொரு பழமொழி உண்டு. அது ஜெர்மானியர்கள் விஷயத்தில் ரொம்ப ரொம்ப உண்மையாகிவிட்டது. ருஷ்யாவைப் பொசுக்கித் தள்ளிவிட வேண்டும்; காகஸஸ பிரதேசத்தில் உள்ள எண்ணெய் வயல்களைப் பிடித்துக் கொள்ள வேண்டும்; ருஷ்யாவைக் கை வசப்படுத்திக் கொண்டு, ஜப்பானியருடன் கைகோர்த்துக் கொள்ள வேண்டும்; அப்படியே, ஈரான் வழியே, ஆப்கானிஸ்தானத்தில் புகுந்து, இந்தியாவை அடைய வேண்டும்; ஐரோப்பா, ஆசியா முழுவதிலும் அச்சாதிக்கம் ஏற்பட வேண்டும்; ருஷ்யா என்கிற ஒரு தேசம் இருக்கப்படாது; என்றெல்லாம் ஹிட்லர் எண்ணி யிருந்தார்.

ஆரம்பத்திலே, அவருக்கு வெற்றிகளும் நிறையக் கிடைத்தன. காகஸஸ் எண்ணெய் வயல்களை எட்டி கூடப் பார்த்து விட்டன அவரது படைகள். ருஷ்யர்களுடைய தலை நகரான மாஸ்கோவை ஜெர்மானியர் அணுகப் பார்த்தனர். மாஸ்கோ போய் விட்டால் என்ன செய்வது என்ற பீதி கூட ருஷ்யர்களுக்கு ஏற்பட்டது. அந்த நினைவில், தங்கள் சர்க்காரை பல நூறு மைல்களுக்குக் கிழக்கே உள்ள ஒரு ஊருக்கு மாற்றினர். ருஷ்யாவின் பொக்கிஷம் போலிருந்த யூக்ரேன் பிரதேசம் முழுவதும் நாஸிகள் வசமாயிற்று. தாங்கள் பிடித்ததும், அழித்ததும், அடித்ததும், இருப்பதும் சாஸ்வதம் என்று நாஸிகளும் நினைத்தனர். நாஸிகளின் தூண்டுதலின் பேரில் பேராசையோடு வந்த ருமேனியப் படையினரும் எண்ணினர்.

ருஷ்ய நகரங்களை அழிக்கும் பொழுதும், ருஷ்யர்களை விரட்டும் பொழுதும், ருஷ்யர்கள் மீது குண்டுமழை பொழியும் பொழுதும், அச்சுப் படையினருக்கு ஆனந்தமாகத் தானிருந்தது.

“கெடுவான் கேடு நினைப்பான்”

ஆனால், ருஷ்யர்களுக்குக் கேடு நினைத்த ஜெர்மானியர், ருமேனியர் ஆகியோரின் கதி என்னாயிற்று? சுடுகிற கரண்டியைத் தெரியாது தொட்டவன் என்ன செய்வான்? கரண்டியை உதறிவிட்டு ‘உஸ், உஸ்’ என்று கைகளை ஊதிக் கொண்டு, சுட்ட இடம் ரணமாகாமலிருக்க மருந்தைத்தேடி ஓடுவான். அதே போலவே, ருமேனியரும், ஜெர்மானியரும் தங்களுடைய கைகளை ருஷ்யர்கள் மீதும், அவர்களது நகரங்கள், ஆஸ்தி பாஸ்திகள் மீதும் வைத்த தங்கள் கைகளை உதறிகொண்டு, ருஷ்யாவில் எல்லாவற்றையும் விட்டு விட்டு, கை, மெய், மனம் எல்லாம் சுட்டுக் கொதிக்க, உயிர் தப்பினால் போதும் என்று ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து, ‘பாவம்’ என்று சொல்வார் எவரும் இல்லை.

ஒரு ஸ்திரீ லோலன் இருக்கிறான். கையிலே காசு, உடம்பிலே தெம்பு இருக்கும் வரை கண்ட கண்ட வேசியர் மனைகளில் எல்லாம் புகுந்து அட்டகாசம் செய்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதே ஆசாமி, சில வருஷங்களுக்கப்புறம், ஊரில் உள்ள சகல ஸ்திரீ வியாதிகளையும் பெற்று அவஸ்தையான அவஸ்தை இல்லாது அவதிப்படுவதைப் பொது ஜனங்கள் பார்த்தால், ‘ஐயோ பாவம்’ என்பார்களா? ஹூஹூம்! ‘வேணும் நன்றாக! அப்போ எப்படி யிருந்தது சுகம்? இப்போ படட்டும் நன்றாக! துள்ளினான் ஐயா தலை கால் தெரியாமல். இது மாதிரி நாலு பேர் அவதிப் பட்டாத்தான் ஐயா, மத்தவங்களுக்கு புத்தி வரும்’ என்பார்கள்.

அதே மாதிரி, ஜெர்மானியரும், ருமேனியரும் ருஷ்யாவில் மாட்டிக் கொண்டு சரியான உதைகள் வாங்கிய போதும், எண்ணற்ற நாஸிகள் ருஷ்யர்களால் சூழப்பட்டு, வெங்காயம் நறுக்கப்படுவது போல், துண்டு துண்டாக்கப் பட்டபோதும், இப்பொழுது ருஷ்யர்கள் ருமேனியாவிற்குள் புகுந்து ருமேனிய நகரங்களை நொறுக்கும் இச்சமயத்திலும், அடிபடுவோரைப் பார்த்து ‘ஐயோ’ என்று சொல்ல யாரும் தயாராக இல்லை. ஹிட்லர் கட்சி கோணற்கட்சி என்பது தான் நம்ம வீட்டுப் பாட்டியம்மாவிற்குக் கூடத் தெரிந்து போச்சே! கோணல் கட்சி ஜெயிக்கலாமா? இது நியாயமா? அந்தக் கட்சி தோற்று, தலைதூக்க முடியாது அமுங்கிப் போவது தானே நியாயம்? அதற்கான அறிகுறிகள் தான் தோன்றிக் கொண்டிருக்கின்றன. ஆகவே அனைவரும் சந்தோஷப்படும்படியான சந்தர்ப்பம் இந்த நிமிஷத்தில் இல்லாவிட்டாலும், இன்னும் சில மாதங்கள் கழித்தோ, இன்னும் ஒரு வருஷம் கழித்தோ, ஒரு சில வருஷங்கள் கழித்தோ வரத்தான் போகிறது. அதில் சந்தேகமே யில்லை.

என்னபோடு போடுகின்றன!

ருஷ்யாவிலே என்ன நடக்கிறது தெரியுமோ? இன்னும் கொஞ்ச காலம் போனால், ருஷ்யாவிலே ஒன்றுமே நடக்காது. எல்லாம் ருஷ்ய மண்ணிற்கு வெளியிலே தான் நடக்கும். ஹிட்லர், இருந்தாலும் புத்திசாலி தான். எடுத்த எடுப்பிலேயே, யுத்தத்தை எவ்வளவு தூரம் ஜெர்மனிக்கு அப்பாலே ஒதுக்கிக் கொண்டு போக முடியுமோ, அவ்வளவு தூரம் கொண்டு போய் விட்டார். ஆகவே யுத்தமெல்லாம் பிறதேசங்களில் தான் நடந்து கொண்டிருக்கின்றது இன்னமும். இதனாலே தான் யுத்தமும் இத்தனை காலம் நீடித்து நடந்து கொண்டிருக்கின்றது. இப்பொழுதுள்ள விமானங்கள் மட்டும் கண்டு பிடிக்கப்படாதிருந்தால், இந்த யுத்தத்தின் ஆரம்பத்திலே ஹிட்லரிட மிருந்த சேனைபலத்திற்கு, ஹிட்லர் கண்ட கனவுகள் எல்லாம் நனவுகளாகியே இருக்கும். விமான உற்பத்தியிலே பிரிட்டனும், அமெரிக்காவும் தங்கள் கவனத்தைச் செலுத்திற்றோ, பிழைத்தோமோ! அந்த இரு நாட்டு விமானங்கள் தான் ஜெர்மனி மீது என்ன போடு போடுகின்றன!

ஜெர்மனியின் உற்பத்தி சக்தியைக் குலைக்க வேண்டு மென்பதே நேச தேசத்தாரின் அந்தரங்க நோக்கம். மஹி ராவணனுக்கு அமோகமான பலத்தைக் கொடுத்து, அவனது தலையை ராமலக்ஷ்மணர்கள் எத்தனை தடவை அம்புகளால் கொய்து வீழ்த்தியும், அத்தலைகள் திரும்பத் திரும்ப அவன் கழுத்திலே ஒட்டிக் கொண்டதோடு, அவனது ரத்தம் சிந்திய இடத்தில் எல்லாம் பல மஹி ராவணர்கள் தோன்றும் படியும் செய்து கொண்டிருந்தவை அவனது உயிர் நாடியாக இருந்த தெய்வீக வண்டுகள் தானே? அவை தான் மஹி ராவணனுக்கு அமிர்த சடலை செய்து கொண்டிருந்தன. இதை அறிந்த ஹநுமார், உடனே பறந்து சென்று, அந்த வண்டுகளைத் தானே பிடித்தழித்தார்? அதுவே போல, ஜெர்மன் படைகளுக்குப் பிரமாதமான பலத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பவை ஜெர்மனியிலும், ஹிட்லர் பிடித்த நாடுகளிலும் உள்ள தொழிற் சாலைகள் தான். அதோடு, அந்தச் சாலைகளில் உற்பத்தியாகும் யுத்த தளவாடங்களைச் சுமந்து செல்லுபவை ரயில்கள், விமானங்கள், கப்பல்கள். அவையும் ஹிட்லர் நடத்தும் யுத்தத்திற்கு ஜீவாதாரங்களாகும் ஹிட்லரின் படைகளை ருஷ்யர்கள் அடித்து நொறுக்கிக் கொண்டிருக்கிறார்கள் ஒரு புறத்திலே.

ஒரு முரடன் இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் சிண்டை இன்னொரு பலசாலி சரியானபடி பிடித்துக் கொண்டால், அந்த முரடனை அடிப்பவன் நன்றாக அடிக்கலாமல்லவா? முரடன் திரும்பவும் தனது கை, கால்களை உபயோகப்படுத்தி, ஊரிலே அழிச்சாட்டியங்கள் செய்யாதிருக்கும் வகையில், சௌகரியமாக, குறி பார்த்து அடிக்கலாமல்லவா?

சிண்டைப் பிடிக்கிறார்கள்

நேச தேசத்தாரில், பிரிட்டிஷாரும், அமெரிக்கரும் ஹிட்லரின், இல்லை ஜெர்மனியின் சிண்டைப் பிடித்துக் கொள்ளுவது போன்ற காரியத்தையே செய்து கொண்டிருக்கிறார்கள். ருஷ்யர்கள் சௌகரியமாக ஜெர்மனியர்களது கன்னங்களும், உடம்பும் வீங்க அடித்து வாங்குகிறார்கள். திரும்பவும் இன்னமும் சில தலைமுறைகளுக்காவது ஜெர்மானியர் தலை தூக்க முடியாது என்றே தோன்றுகிறது, இப்பொழுது அவர்கள் பெறும் உதைகளின் அளவைப் பார்த்தால்.

நேச தேச விமானிகள், இரவு பகல் என்று பாராது, ஆயிரக் கணக்கான மைல்கள் பறக்கும் சக்தி பெற்ற நூதன விமானங்களைத் தயாரித்துக் கொண்டு, ஜெர்மானியரின் வசமுள்ள எல்லாப் பிரதேசங்கள் மீதும் பறந்து சென்று, ஜெர்மன் ராணுவ யந்திரத்துக்குத் தீனி போடும் தொழிற்சாலைகளை யெல்லாம் தேடிப் பிடித்து, த்வம்சம் செய்து கொண்டிருக்

கின்றனர். இது காரணமாக விமான உற்பத்தி சாலைகளுக்குப் பிரமாதமான தலைவலி வந்து விட்டது. அதனால் தான், ருஷ்ய அரங்கத்திலே ஜெர்மானியரது விமான லீலைகள் எதும் நடப்பதாகவே தெரியவில்லை. அவர்களுக்கு யுத்த ஆரம்பத்திலிருந்தது போல் அத்தனை விமானங்கள் இப்பொழுது இருக்குமானால், ருஷ்ய நகரங்களை ஜெர்மானியர் சும்மா விட்டு வைப்பார்களா? பதிலுக்குப் பதில் ஆத்திரத்தோடு போய்த் தாக்க மாட்டார்களா? சீமை மீது கூட இப்பொழுது அடிக்கடி அதிக விரோதி விமானங்கள் பறப்பதில்லை. சட்டியிலிருந்தால் தானே அகப்பையில் வரும்? அப்படியே கொஞ்ச நஞ்சம் இருப்பதையும், சொந்தப் புருஷனுக்கென்று ஒதுக்கி வைத்திருக்கிறார்களோ என்னமோ? அதாவது, அசல் ஜெர்மனிக்குள் யுத்தம் புகும் பொழுது உபயோகப் படுத்திக் கொள்ளலாம் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்களோ என்னமோ? வைத்துக் கொண்டிருந்தால் வைத்துக் கொண்டிருக்கட்டுமே! ஜெர்மானியர் தோற்கப் போவ தென்னமோ நிச்சயம். தண்ணீரில் மூழ்குபவன் ஜல மட்டத்தில் மிதக்கும் வைக்கோலைப் பிடித்துக் கொண்டால், பிழைப்பானா? அது மாதிரி, இருக்கிற விமானங்களை இறுகப் பிடித்து வைத்துக் கொண்டு தான் என்ன பிரயோசனம்? அவையா ஜெர்மனியையும், ஹிட்லரையும் காப்பாற்றப் போகின்றன. ஏதோ சில விமானங்களும், விமானிகளும் முஸோலினியைக் காப்பாற்றவில்லையா என்று கேட்கலாம்.

பேச்சு மூச்சுக்கூட இல்லையே!

காத்தன. வாஸ்தவம்! ஆனாலும் என்ன பிரயோசனம்? அவரைப் பற்றி இப் பொழுது பேச்சு மூச்சுக் கூட இல்லையே! ஹிட்லர் முஸோலினிக்குச் செய்தது உதவி இல்லை. பஸ்ட் கிளாஸ் ரேஸ் குதிரை. அது பார்க்கிற பார்வையோ பிரமாதமாக இருக்கிறது. அது திடீரென ரேஸ் ஓடும் பொழுது கீழே குப்புற விழுந்து விடுகிறது. காலும் ஒடிந்து விடுகிறது. உடனே அதை என்ன செய்கிறாகள்? சுட்டுக் கொன்று விடுகிறார்கள். ஏன்? அதற்குக் கருணை காட்ட! 'ஐயோ, இதென்ன கூத்து?' என்று கேட்பீர்கள். அந்த குதிரை அந்தஸ்தோடு இருந்ததல்லவா? அது பந்தய ஓட்டத்தில் ஓடுகிறது; பணத்தைச் சம்பாதித்துக் கொடுக்கிறது என்பதனால் தானே அதற்கு மதிப்பு? இப் பொழுது அதற்குக் கால் ஒடிந்து விட்டால், அது இனி ஓட முடியாதல்லவா? இனி மேல் அது, அதன் சொந்தக் காரனுக்கு ஒரு பாரம் தானே? அதோடு, அது உயிருடனிருந்தாலும் அதை முன் போல் யார் கவனிப்பார்கள். ஆகவே அதற்குக் கருணை காட்டும் வகையில், அதை அந்த ஸ்தலத்திலேயே கொன்று விடுவார்கள். அது மாதிரி, முஸோலினியை அப்படியே விட்டிருக்க வேண்டும் ஹிட்லர். நொண்டியாகி, மொட்டையாகி, மானமிழந்து, மதிகெட்டு, போன திசை எல்லார்க்கும் பொல்லானாகி விட்ட முஸேரலினியைக் காப்பாற்றினார் ஹிட்லர். இப்பொழுது அந்த முஸோலினியை யார் மதிக்கிறார்கள்? உலகமே அவரைப் பார்த்து, 'சீ! சீ!' என்கிறது.

ஹிட்லர் இதை யெல்லாம் இப்பொழுது கவனித்துக் கொண்டிருக்க முடியுமா என்ன? நேற்று வரை, ருஷ்யாவிலே எங்கெங்கே முன்னேற வேண்டும்; பிடித்த இடங்களை என்னென்ன செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டுக் கொண்டிருந்த ஹிட்லர், இன்று தமது ஆர்பாட்டங்களை யெல்லாம் அடக்கிக் கொண்டு, எங்கோ ஒரு மூலையில் ஒடுங்கி, தமது சகாக்களைக் கலந்து, 'என்ன செய்யலாம்?' என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறார். தலைக்கு மேலே வெள்ளம் போவது போலாகி விட்டது. இனி, தப்புவதென்பது அசாத்தியந் தான். இது ஹிட்லருக்குத் தெரியாதென்று நினைக்கிறீர்கள்? ஆனால் அவர் அதை ஒப்புக் கொண்டு, பாக்கி உள்ள படைகளையும், பட்டணங்களையும், பாலர்களையும், பாவையரையும் காப்பாற்றும் வகையில் புத்திசாலித் தனமாக எதாவது செய்வார் என்று எண்ணுகிறீர்களா? அப்படி எண்ணவே வேண்டாம். இனித் தான் வந்தது வருகிறதென்று, ரொம்பக் கண்மூடித்தனமான காரியங்களைச் செய்வார்.

ஜெர்மனியின் சக்திக்குப் பங்கம்

இப்போது நிலைமை எப்படி யிருக்கிறது தெரியுமோ? ஹிட்லரிட மிருந்த பய பக்தி எல்லாம் அவர் பிடித்த நாடுகளிலிருப்பவர்களுக்கு அதி வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது என்றே தோன்றுகிறது. மொத்த மொத்தமாக ஜெர்மன் வீரர்கள் ருஷ்யப் படைகளால் ஹதம் செய்யப்படுவது ஜெர்மனியின் சக்திக்கு பங்கம். ஜெர்மனிக்குள்ளும், மக்கள் குஷியாக இல்லை. ஹிட்லரின் சகாக்களில் வாயாடியான கப்பல்ஸ் துரைக்கு பெர்லின் நகர மேயர் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறதாம். அவர் அங்கு வேறென்ன வேலை பார்த்தாலும், பார்க்காவிட்டாலும், அமெரிக்கப் பறக்கும் கோட்டைகள் போடும் குண்டுகளால் மாட மாளிகைகள், தொழிற்சாலைகள் எல்லாம் தூளாகி, எங்கும் பறந்து படியும் தூசியையும், குப்பையையும் பெருக்கி ஒதுக்கும் வேலையைப் பார்த்தேயாக வேண்டும்.

புது வரியும், கரைத்த புளியும்

ஜெர்மனியிலே நாணயப் பெருக்கம் அதிகமாகி விட்டதாம். ஆகவே, புதுவரிகள் பல போடப் போகிறார்களாம். நாஸிப் படைகள் வெற்றியைச் சம்பாதித்துக் கொண்டே இருந்தால், போனால் போகிறது என்று ஜெர்மானியர் அதிக வரிகளைக் கொடுப்பார்கள். ஆனால், இப்பொழுதோ எல்லாமே கடலில் கரைத்த புளி மாதிரி போய்விடுமோ இல்லையோ? அதனாலே, ஜெர்மானிய மக்களுக்கு, அதிக வரி என்றால் ஆத்திரந் தான் வரும்.

விதியின் வேலை

விதியைப் பாருங்கள். சரியாக பதினெட்டு மாதங்களுக்கு முன்பு தான், ஜெர்மன் சேனாபதிகளான பாலஸ் என்பவரும், மான்ஸ்டீன் என்பவரும் உத்சாகத்தோடு, காகஸஸ் மலைப் பிரதேசங்களில் உள்ள ருஷ்ய எண்ணெய் வயல்களைப் பிடிக்க ஓடிக் கொண்டிருந்தார்கள். பதினெட்டு மாதங்களுக்குப் பிறகு, இப்பொழுது, அந்த பாலஸ் சிறையிலே கிடக்கிறார். மான்ஸ்டீனின் படைகள் சின்னா பின்னப்பட்டு, போகிற திசை தெரியாமல், பரிதாபமாகப் பதைத்தோடுகின்றன. அவர் தமது படைகளை எவ்வாறு சேர்ப்பது, எப்படி நடத்திச் செல்லுவது என்பது கூடத் தெரியாது திகைக்கிறார்.

ருஷ்யப் படைகள் ருமேனியாவிற்குள் திடு திடு என்று நுழைந்து விட்டன. ப்ளாஸ்டி என்ற இடத்தில் உள்ள எண்ணெய் வயல்களைப் பிடிக்க ருஷ்யர்கள் முனைந்திருக்கிறார்கள். ஜெர்மன் படைக்கு உயிர், அந்த வயல்கள். ருமேனியரைச் சரணடையும்படி ருஷ்யப் பத்திரிகைகள் புத்தி சொல்லுகின்றன. ஆனால் நல்ல உபதேசம் உருப்படுகிறவர்கள் செவிகளில் மட்டுந்தானே விழும்? ருமேனியாவில் நாஸிகள் தங்கள் பிடிகளைக் கெட்டிப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எண்ணெய் வயல்களுக்கும் பலமான பாரா போட்டிருக்கிறார்களாம். ருமேனியாவிற்குள் மேற் கொண்டும், மேற் கொண்டும் ருஷ்யப் படைகள் வந்த வண்ணமாகவே இருக்கின்றனவாம். ருமேனியாவின் தலை நகர், எண்ணெய் வயல்களில் எல்லாம் நேச தேச விமானிகளின் குண்டு வர்ஷத்திற்குக் குறியாகி யிருக்கின்றனவாம்.

கார்ப்பேதிய மலை மீது!

ருமேனியாவில் ஒரு படை முன்னேறிக் கொண்டிருக்க, கார்ப்பேதியன் மலைகளைக் கடந்து, செக்கோஸ்லோவேகிய தேசத்திற்குள்ளே இன்னொரு படை புகுந்து விட்டதாம். கார்ப்பேதியன் மலைகள், சிம்லா மலைகளைப் போலிருப்பவை. 880 மைல் நீளமுள்ளவை. அவற்றிலே இப்பொழுது ஏகப் பனி கொட்டுகின்றதாம். அந்த மலைகளை, ருஷ்யரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த ஹிட்லர் உபயோகிக்கக்கூடும் என்று பலர் நினைத்தார்கள். ஆனால், கார்ப்பேதிய மலை உச்சி மீது இப்பொழுது செக்கோஸ்லோவேகிய தேசக் கொடி பறக்கிறது. ஹிட்லரின் ஆட்கள் ருஷ்ய பீரங்கி வெடிகளுக்குமுன் நிற்க முடியாது ஓடுகிறார்கள். முதலிலே ஒரு டாங்கியிலேறிய நால்வர் தான், இந்த மலைக் கணவாயைக் கடந்தார்களாம். பின்னாலே உதவி வரும்வரை, ஒரு நாள் எல்லாம் அவர்கள் சமாளித்துக் கொண்டிருந்தார்களாம்.

ஒடெஸ்ஸா ஒடிந்தது

மூன்று தினங்களுக்கு முன்னால் திடுதிப்பென்று எதிர்பாராத நற்செய்தி ஒன்று வந்து சேர்ந்தது. கருங்கடல் பிரதேசத்திலே, ஒடெஸ்ஸா என்றொரு நகரம் இருக்கிறது. நான்கு லக்ஷம் பேர்களிருந்த நகரம் இது. இது முப்பது மாதங்களுக்கு முன் ஜெர்மானியரால் முற்றுகையிடப்பட்டது. இரண்டு மாதங்களுக்கு மேல் இது நாஸிகளை சமாளித்து நின்றது. பிறகுதான் அது நாஸிகள் வசமாயிற்று. அத்தகைய ஒரு ஊரை, ருஷ்யப் படைகள் நெருங்கினது தான் தாமதம். அவ்வூரில்

உள்ள ஜெர்மானியர்கள் எடுத்தார்கள் ஓட்டம். சாவு, பழி எதுமின்றி ஒரு முக்ய மான துறைமுகம் ருஷ்யருக்குக்கிடைத்து விட்டது.

'ஒடெஸ்ஸா போர் லேசிலே முடியாது' என்று சில யுத்த நிருபர்கள் சொல் லிக் கொண்டிருந்தார்கள். அவர்களது வார்த்தைகளைப் பொய்யாக்க ஸ்டாலினே ருஷ்ய வீரர்களோ தீர்மானித்து விட்டார் கள் போலிருக்கிறது. இல்லே, ஒரு வேளை, ஜெர்மானியரே அந்த நிருபர் களைப் பொய்யர்களாக்கத் துணிந்திருக்க வேண்டும்.

கூட்டாளியின் கதி

ஒடெஸ்ஸா போய் விட்டது. ஆகவே, ஜெர்மானியர் ருமேனியாவில் உள்ள கான்ஸ்ன்பி துறைமுகத்தைப் போய்ப் பிடித்துக் கொண்டார்களாம். கருங்கட லில் ஜெர்மானியர் சில நீர் மூழ்கிகளை வைத்திருக்கிருப் போலிருக்கிறது. அவர் களது படைகள் கிரைமியாவில் நிறையச் சிக்கிக் கொண்டு தடுமாடிக் கொண்டிருக் கின்றன. ருஷ்ய விமானங்கள் வேறே இப்பொழுது ஜெர்மானியரைத் தொந் தரவு செய்யத் தொடங்கி யிருக்கின்றன.

இன்னொரு ருஷ்யப் படை, கிட்டத்தட்ட இரண்டு லக்ஷம் பேர்களடங்கிய ஒரு பெரிய ஜெர்மன் சேனையைச் சூழ்ந்து கொண்டு, நசுக்கித் தொலேக்க முயன்று கொண் டிருக்கிறது. ஸ்காலா என்ற இந்த இடம், ஸ்டாலின்கிராடு மாதிரியே ஆகிவிடும்போ லிருக்கிறது.

நஷ்டம் இல்லாவிட்டால் போதுமே!

ஜெர்மனியின் பொருளாதார நிலேமை யும் ரொம்ப மோசமா யிருக்கிறது. பிர மாத லாபம் வரப்போகிறது என்று ஹிட் லர் எண்ணிக் கொண்டிருந்தார். இப் பொழுது என்னடா என்றல், லாபம் இல்லாவிட்டாலும் பரவா யில்லே. நஷ் டம் ஏற்படாது தடுக்க வேண்டும் என்று நாஸிகள் முயற்சிக்கிருர்கள். இது ரொம்ப சந்தோஷப் படத்தக்க முயற்சியா என்ன?

அயனும் நிறுத்த முடியாது!

ருஷ்யர்கள் போகும் வேகத்தைப் பார்த்தால், அவர்களே அயனும் தடுத்து நிறுத்த முடியாது போலிருக் கிறது. ஹிட்லர் தமது சகாக்களுடன் கலந்து பேசி, ஏதோ பிரமாதமான முடி வுகள் செய்திருக்கிருராமே! ஜெர்மனி யை வெகு சீக்கிரமே யுத்தம் தரைமூலம் எட்டி விடலாம். கருங் கடலிலும், வட கடலிலும் கூட ருஷ்யர்கள் வலுத்திருக் கிருர்கள். சீமையிலும் வெகு மும்முர மாக இரண்டாவது போர் முனேக்கான ஏற்பாடுகள் நடந்துக் கொண்டிருக்கின் றன. அது வந்து விடப்போகிறதே என்ற பீதியில், நாஸிகள், ஹாலந்து, பெல்ஜி யம் ஆகிய நாடுகள் வடகடலேத் தொட் டிருக்கும் எண்ணயிரம் சதுர மைல்கள் பரந்துள்ள பிரதேசங்களில் சமுத்திர ஜலம் பாய்ந்து தோங்குமாறுசெய்து விட்டார்களாம். 'வாக்கிங் ஸ்டிக்கை' குறுக்கே போட்டால், கோவில் தேர் நின்று விடுமா என்ன?

இத்தாலியிலே பீதி!

இத்தாலியிலே, காஸினே நகரிலே நாஸிகளுக்கு ஒரு பெரிய வெற்றி தான். பாழாகப் போன அந்த ஊரை நாஸிகள் விடவில்லே. பிசாசுகள் போல் அங்கேயே ஒட்டிக் கொண்டிருந்தார்கள். அப்புறம் அன்ஸியோ பீச்சோரத்திலும் அவர்களது அட்டகாசம் கொஞ்சம் பலித்தது. அதற் கப்புறம் கப்சிப் என்றிருக்கிறது. ஆனல், வட இத்தாலியின் இருகரைகளிலும் நேச தேசப படைகள் எந்தச் சமயத்திலும் வந் திறங்கி, தெற்கே உள்ள ஜெர்மன் படை யை அலறடிக்கக் கூடும் என்கிருர்கள். கூண்டோடு கைலாசம் என்பதுபோல் தான், ஜெர்மன் படைகள் போகப்போ கின்றன போலிருக்கிறது.

ருஷ்யர்கள் ஒரு பக்கமும், தெற்கே யிருந்து நேச தேசப்படைகள் ஒரு பக்க மும் பால்கன் பிரதேசங்களைத் தாக்குவ தென்றல், 'கோவிந்தா, கோவிந்தா!' என்று தானகும் நடுவிலே சிக்கிக் கொள் ளும் நாஸிகள் விஷயம்.

கெடுவான்...... ?

ருஷ்யர்கள் நாசமாக வேண்டும் என்று எண்ணினர் நாஸிகள், இப்பொழுது அவர்களே நாசமாகிக் கொண்டு வருகிருர் கள். கெடுவான் கேடு நினைப்பான் என் பது இது தான்.

வீரரின் தந்தைக்கு வாழ்த்து

ஜமேதார் கண்ணயிரம்,
எக்ஸ்ட்ரா அஸிஸ்டெண்ட் ரிக்ரூட்டிங் ஆபீசர்,
செங்கற்பட்டு.

சுபேதார் சுப்பிரமணியம்

ஐயா,

தங்களுடைய திருமகன் சுபேதார் சுப்பிரமணி யம் சமீபத்தில் காலமானது பற்றி, தங்களுக்கு நேர்ந்துள்ள பெருந் துக்கத்தில், இந்த மாகா ணத்தில் தொண்டாற்றிக் கொண்டு வரும் யுத் தப் பத்திரிகை என்னும் முறையில், எமது மன மார்ந்த அனுதாபத்தைத் தங்களுக்குத் தெரி வித்துக் கொள்ளுகிருேம். அவர் மரணத்தால், நேர்ந்துள்ள பெரு நஷ்டம், தங்களுக்கும், அவ ருடைய நெருங்கிய உறவினருக்கும் மட்டும் ஏற் பட்டதல்ல. அவருடைய மாகாணத்திற்கும், ராணுவத்திற்குமே ஏற்பட்டதாகும்.

தங்களுடைய நண்பர்கள் அயலார்கள் ஆகி யோரின் நன்மதிப்பிற்குத் தாங்களும் உரிய வ களே. தங்கள் வாழ்நாட்களும் கண்ணிய மானதே. "இவன் தந்தை எந்நோற்ருன் கொல்?" என்னும் புகழ், எல்லாத் தந்தையருக்கும் வாய்ப்பதரிது. தங்கள் திரு மகனர் தன் உயிரைக் கொடுத்தார். அவர் உயிர் துறந்த முறை, தங்கள் குடும் பத்திற்கும், தங்கள் ஜில்லாவிற்கும், தங்கள் மாகாணத்திற்கும் பெரும் புகழை உண்டாக்கி விட்டது. அது பற்றி தங்களை மிகப் பணிவோடு பாராட்டுகிருேம்.

ஐயா, தங்கள் மகன் ஒரு "சோல்ஜர்". எல்லா "சோல்ஜர்களும்" வீரர் களாக மாட்டார்கள். விஷய மறிந்து தான் நான் இதை எழுதுகிறேன். ஒரு சோல்ஜருக்கு, உடல் பலம், கூறிய அறிவு, கடமை யுணர்ச்சி இம் மூன்றும் அவசியம். ஆனல், வீரர்களுக்கு இன்னும் சில சிறப்புக்கள் இருக்க வேண்டும்.

இந்த உன்னதமான காதையை முழு விவரங்களோடு மீண்டும் சொல்லுகிருேம். ஏனென்றல், எல்லோருக்கும் இது தெரியும்படிச் செய்ய ஒரு போதும் முடியாது. காசினே 4,000 மைல்களுககு அப்பால் உள்ளது. இங்கே சேறு வெகு அதிகம். நெடு நாட்கள் இங்கே போர் நடந்து தீய்ந்து போயிருக்கிறது. அங்கே ஒரு சுரங்க வெடி வெடிப்பதை அவர் கண்டார். அது அப்படியே வெடித்திருந்தால், அநேக உத்தி யோகஸ்தர்களும் படையினரும் கட்டாயம் மாண்டு போயிருப்பார்கள். நன்ருகப் பயின்ற அவர் மனம் விரைவாகச் சிந்தித்தது. அந்த ஆபத்தை அகற்ற முடியாது என்று உணர்ந்தார். ஆகவே, தானே அந்த சுரங்க வெடியின்மேல் பாய்ந்து விழுந் தார், தன் நண்பர்கள் உயிர் வாழும் பொருட்டு, மகத்தான முறையில் தன் உயிரைத் தியாகம் செய்தார்.

இந்தச் சிறு காதை, தென் இந்திய வீரக் காவியமாக அமைகிறது. ஒரு தமிழ்ப் புலவர் இதைப் பாட்டாக அமைத்து, அதை பாகவதர்கள் வழிவழியாகப் பாட்டும் சோல்ஜராக வாழ்ந்து வீரராக மாண்டவரின் நினைவு காரணமாக, தங்கள் முதுமை யின் பொறுப்பு குறையு மென்று எதிர் பார்ப்போமாக!

தங்கள் உண்மையுள்ள,
ஆசிரியர் "யுத்த சஞ்சிகை"

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

ஏப்ரல் 4.—சென்ற 4 வருஷங்களாக நடைபெற்ற போராட்டத்தில், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாட்டுப் படைகளில் மொத்தம் 6,67,159 பேருக்குச் சேதம் என்று மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபையில் கூறினூர்.

ஏப்ரல் 5.—1944-ம் வருஷத்தின் முதல் 3 மாதங்களில் ஜெர்மனி மீது 48,000 டன் வெடி குண்டுகள் ஜெர்மனி மீது வீசப்பட்டதாகவும், பிரிட்டன் மீது 2,400 டன் வெடி குண்டுகள் மட்டும் வீசப்பட்டதாகவும், விமான மந்திரி சர் ஆர்ச்பால்ட் சிங்க்ளேர் காமன்ஸ் சபையில் குறிப்பிட்டார்.

"ட்ரைபிட்ஸ்" என்னும் ஜெர்மன் யுத்தக் கப்பலை பிரிட்டிஷ் கப்பற்படை விமானங்கள் செயலற்றுப் போகும்படி செய்திருக்கலாமென நம்பப்படுகிறது.

ஏப்ரல் 6.—நிலக்கரி நிலைமையைக் குறித்து, பிரிட்டிஷ் நிலக்கரி மந்திரி ஒரு அறிக்கை விடுத்தார்.

ஏப்ரல் 9.—ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல் போராட்டத்தைக் குறித்து மிஸ்டர் சர்ச்சிலும், மிஸ்டர் ரூஸ்வெல்டும் சேர்ந்து வெளியிட்ட அறிக்கை வெளியானது.

ஹிட்லர் ஜெர்மனியிலுள்ள அரசியல் தலைவர்களுடனும் இராணுவத் தலைவர்களுடனும் பெர்ச்டெஸ்காடன் என்னுமிடத்தில் கூடிக் கலந்து பேசியதாகத் தெரிகிறது.

ஏப்ரல 10.—அமெரிக்க உதவி மந்திரி மிஸ்டர் எட்வர்ட் ஸ்டெட்டினியசும், லண்டனில் அமெரிக்க ஸ்தானிகரா யிருக்கும் மிஸ்டர் ஜான் வினுண்டும், நேற்று பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சிலைக் கண்டு நெடு நேரம் விவாதித்தார்கள்.

பெர்லின் நகரத்தின் சர்வாதிகாரியாக கொப்பல்ஸை ஹிட்லர் நியமித்திருக்கிறுர்.

ஏப்ரல் 9.—விலைவாசிகள் உயர ஒட்டாத படி தடுக்கும் பொருட்டு, புதிய வரிகள் விதிக்கும்படி நேருமென்று ஜெர்மன் நிதி மந்திரி குறிப்பிட்டார்.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

ஏப்ரல் 7.—பிரஞ்சு மீட்சிக் கமிட்டி பற்றியும், இத்தாலியுடன் செய்து கொள்ளப்பட்ட சமரச உடன்படிக்கையைக் குறித்தும் பல கேள்விகளுக்கு மிஸ்டர் ரூஸ்வெல்ட் பத்திரிகை நிருபர்களிடம் பதிலளித்தார்.

ஏப்ரல் 9.—அமெரிக்க அந்நிய நாட்டுக் கொள்கையைப் பற்றி மிஸ்டர் கார்டல் ஹல் ஒரு ஒலிபரப்புப் பிரசங்கம் செய்தார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

ஏப்ரல் 4.—மோகாங் பள்ளத்தாக்கில் சீனப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

ஏப்ரல் 5.—அஸ்ஸாம் போர்முனையின் பல பகுதிகளிலும் எதிரிகள் தாக்கிக் கொண்டிருக்கின்றுர்கள்.

தென்கிழக் காசியத் தலைமைக் காரியாலயத்தில், மூவகைப் படைகளிலும் மிகவும் அனுபவம் வாய்ந்த விஞ்ஞானிகளைக் கொண்ட தோர் ஸ்தாபனத்தை நியமித்திருப்பதாக, பிரிட்டிஷ் டிபுடி முதல் மந்திரி மிஸ்டர் அட்லி குறிப்பிட்டார்.

ஏப்ரல் 6.—தெற்கே யிருந்து இம்பாலைக் கைப்பற்ற ஜப்பானியர்கள் செய்த முயற்சி பலிக்கவில்லை. கொஹிமாவை எதிரிகள் தாக்கலாம்.

மோகாங் பள்ளத் தாக்கிலுள்ள வாகாங் என்னு மிடத்தை சீனப் படைகள் தாகுகின்றன.

இலங்கையில் பிரிட்டிஷ் விமானப் படைத் தலைவராக **ஏர்வைஸ் மார்ஷல் ஏ. டர்ஸ்டன்** நியமிக்கப்பட்டு, அவர் தன் பதவியை ஏற்றுக்கொண்டார்.

ஏப்ரல் 7.—கொஹிமா பகுதியில் ஜப்பானியர்கள் தம் பலத்தைத் திரட்டிக் கொண்டிருக்கிறுர்கள்.

இம்பாலுக்குப் போகும் பாதையை 17-வது இந்தியப் பட்டாளம் சுத்தப்படுத்தி வைத்திருக்கிறது. ஜப்பானியர்கள் இங்கே தாக்கினுல் அவர்களை விரட்டியடிக்கக் கூடிய நிலைமையில் அது இருக்கிறது.

ஏப்ரல் 8.—அஸ்ஸாம்'-பர்மா போர் முனையில் சுமார் 6,000 ஜப்பானியர்களுக்குச் சேத மேற்பட்டிருக்கக் கூடுமென்று நம்பப்படுகிறது.

கொஹிமா ஆபத்தான நிலைமையிலிருக்கிறது. இம்பால் முற்றுகையிடப்பட்டிருக்கிறது.

ஏப்ரல் 9.—டாமு என்னுமிடத்தை ஜப்பானியப் படைகள் கைப்பற்றின. திரும்பவும் அதைக் கைப்பற்றுவதற்கு நடைபெற்ற போரில் கொஹிமா வரையிலும் ஜப்பான் படைகள் விரட்டப்பட்டன.

ஏப்ரல் 10.—இந்து மகா சமுத்திரத்தில், நேசநாட்டுப் படைகள் போராடிய தன் பயனுக, இரண்டு பெரிய எதிரிக் கப்பல்கள் (தடை செய்யும் கப்பல்கள் அல்லது சப்ளை கப்பல்கள்) தாமாகவே மூழ்கி விட்டன.

யுத்த மந்திராலோசனை சபையின் இந்தியப் பிரதிநிதியான சர் பொரோஸ்கான் நூன் இங்கிலாந்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்.

ரஷ்யாவும் பின்லாந்தும்.

ஏப்ரல் 4.—ரஷ்யர்கள் **ஷோடினைக்** கைப்பற்றினுர்கள். டார்னபோலில் பெரும் பகுதி, சோவியத் கையில் இருக்கிறது.

ஏப்ரல் 5.—**ரஸ்டால்னேயாரை** சோவியத் படைகள் கைப்பற்றின.

ரஷ்ய-போலந்து சமாதான தூதரான டாக்டர் ஜுஹோ பாஸிகிவி மீண்டும் தன் சமரசப் பேச்சுக்களை ஆரம்பித்திருக்கிறுர்.

ஏப்ரல் 6.—**ஸ்காலா** முதலிய பல முக்கியமான இடங்களை சோவியப் படைகள் கைப்பற்றி யிருக்கின்றன.

ஏப்ரல் 7.—**ஆக்கீவ்** முதலிய பல முக்கியமான இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றி யிருக்கின்றன.

ஏப்ரல் 8.—செக்கோஸ்லோவேகிய-ருமேனிய எல்லைப்புரத்திற்கு செம்படைகள் வந்து சேர்ந்து விட்டன.

சேரெத் ரஷ்யர் வசமானது.

செக்கோஸ்லோவேகிய எல்லையைச் செம்படைகள் அணுகியது பற்றி, தோழர் ஸ்டோலினுக்கு டாக்டர் பினேஷ் ஒரு பாராட்டுச் செய்தி யனுப்பியிருக்கிறுர்.

ஏப்ரல் 10.—வடகடலில் மிகவும் முக்கியமான துறைமுகமான **ஒடெஸ்ஸாவை** சோவியத் படைகள் மீண்டும் கைப்பற்றிக் கொண்டன. ருமேனியாவில், **லாக்ரா, யஹோர்ரு** முதலிய 200 இடங்களையும் கைப்பற்றி விட்டன. ஜாஸ்லி-பாஸ்கனி ரயில்வே லைனையும் வெட்டி விட்டன.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரிகள் வயப்பட்ட நாடுகள்.

ஏப்ரல் 5.—அரசாங்கத் துரோகிகளான விஷி அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களுடன் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ள வேண்டுமென்னும் எண்ணமே பிரிட்டிஷ் அரசாங்கத்திற்காவது அமெரிக்க அரசாங்கத்திற்காவது கிடையாது என்று, மிஸ்டர் ஈடன் காமன்ஸ் சபையில் கூறினூர்.

ஏப்ரல் 7.—ஜெனரல் ஜிராட் தன் பதவியை ராஜிநமாச் செய்துவிட்டார்.

ஏப்ரல் 8.—ஜிராட்-டிகால் தகராறு முற்றுகிறது.

விஷி—ஜெர்மன் சமரசம் ஏற்பட்டது முதல் இதுவரை பிரஞ்சுக் காரர்களில் ஆண்களும் பெண்களும் 30,000 பேர்கள் சுட்டுக் கொல்லப் பட்டிருக்கின்றனர்.

நடு நிலைமை நாடுகள்.

ஏப்ரல் 7.—1943-ம் வருஷத்திய மாதங்களில் துருக்கியிலிருந்து ஜெர்மனிக்கு அனுப்பப்பட்ட க்ரோம், இப்போது மாதந்தோறும் அனுப்பப்படுவதில் 3-ல் ஒரு பங்கு கூட இல்லை.

தூரக் கிழக்கு நாடுகள்.

ஏப்ரல் 4.—மத்திய ஐரோப்பிய நாடுகளிலுள்ள ஜப்பான் ஸ்தானீகர்களின் ஒரு விசேஷ மகாநாடு பெர்லின் நகரத்தில் நடைபெறப் போவதை முன்னிட்டு, அதிற் கலந்துகொள்ளும் பொருட்டு மாட்ரிட் நகரத்திலுள்ள ஜப்பான் ஸ்தானீகர் பெர்லினுக்குப் பிரயாணமானூர்.

மார்ஷல் தீவுகளைச் சேர்ந்த ஒதோ, உஜே, லே, லிடே, நமு, அல்லெரிக்லாப லாப், நமோரிக், இபன், கிலி. ஆர்னே, பிக்னி முதலிய இடங்களை அமெரிக்கப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஏப்ரல் 5.—அட்மிரால்டி தீவுகளைச் சேர்ந்த **ராம்புடோ** தீவை நேசநாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.